ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/61 - 2019 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2019.08.09

2135/61 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு

இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள்

2008.06.10 ஆந் திகதிய 1553/10 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் உத்திகள் மீள் பரிசீலனை செய்து திருத்தியமைத்து அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்று கீழ்வரும் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் உத்திகள் மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் பொது மக்களின் கவனத்திற்காக இதை வெளியிடுகின்றேன்.

ரவி கருணாநாயக்க,
மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை
அபிவிருத்தி அமைச்சர்.

2019, ஓகத்து 08.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள்

மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு - இலங்கை அரசாங்கம்

இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள் (2008) வெளிப்படுத்தலின்படி, முழுமையான மின்மயமாக்கல் மற்றும் மீள்புத்தாக்க மின்சக்தி மேம்பாட்டு இலக்குகள் நாட்டில் அடையப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தில் வெளியிடப்படும் இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயத்தின் முக்கிய நோக்கமானது இலங்கையின் சமூக நீதி மேம்பாட்டுக்கு உதவும் வகையில் எளிதான மற்றும் மலிவான எரிசக்திச் சேவைகளை வழங்குவதற்காக சுத்தமான, பாதுகாப்பான, நிலையான, நம்பகமான மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான ஆற்றல் விநியோகத்தைப் பராமரிப்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஆகும். இந்தக் கொள்கை இலங்கையின் எதிர்கால இலக்குகள், தற்போதைய உலகளாவிய எரிசக்திப் போக்குகள், ஐக்கிய நாடுகளின் ஏழாவது நிலைத்தன்மையான இலக்குகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த எரிசக்திக் கொள்கை சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளின் பரந்த அளவில் பரவியுள்ளதுடன், மேலும் 2050 இற்குள் கைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கார்பனேற்றம் போன்ற சகல மின்சக்தி விநியோக வலையமைப்புகளின் முழு மாற்றத்திற்கும் வழிவகுக்கும்.

குறிப்பிட்ட மின்சக்தி நோக்கங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கொள்கைகளை அடைவதற்கும் மற்றும் கொள்கைகளை வெற்றிகரமாக அடையவும் பொறுப்புக் கூறத்தகு நிறுவன பொறுப்புடன் செயல்திறன் காலக்கெடுவை இந்த ஆவணத்தில் கோடிட்டுக் காட்டுகிறது. இது இலங்கையின் தேசிய எரிசக்தி மற்றும் மூலோபாயத்தை வெளியிடுவதற்கு முன்னர், வரைவு தொடர்பில் பொது மக்களின் யோசனைகளைப் பெற்று மின்சக்தித்துறை மற்றும் அது தொடர்பிலான வல்லுநர்கள் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கையின் செயலாக்கம் கண்காணிக்கப்படுவதுடன், அதன் தாக்கத்தை என்னால் நியமிக்கப்பட்ட பிரதான மின்சக்தித் துறைப் பிரதிநிதிகளின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் இயக்குநர்கள் மற்றும் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் போன்ற அதனுடன் தொடர்புடைய துறைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு தேசிய வழிநடத்தல் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகிறது. குழு, காலாண்டு இடைவெளியில் கூட்டங்களின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் புதிய உறுப்பினர்களை நியமிக்க அதிகாரம் உள்ளது. இக்குழுவானது மின்வலு எரிசக்தி அமைச்சின் செயலாளரால் தலைமை தாங்கப்படும்.

செயற்றிறன் கால எல்லையில் கண்டறியப்பட்டவாறு பொறுப்பான நிறுவனங்களுடன் சந்திப்பு, செயல் திட்டங்களைத் திருத்துதல், முன்னேற்றத் தகவல் மற்றும் செயல்திறன் கடிதத்தில் அடையாளம் காணப்பட்ட பிற கடிதப் பரிமாற்றங்களுக்கு தொழில்நுட்ப பணிக்குழு தேசிய வழிநடத்தல் குழுவிற்கு உதவிகள் வழங்கப்படும். தேசிய எரிசக்திக் கொள்கை மற்றும் மூலோபாயத்தை வகுக்க மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு, தொழில்நுட்பச் செயற்குழுவாகச் செயல்படும்.

இந்தக் கொள்கை அறிக்கை மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்ட அனைத்துக் கொள்கைகள், உத்திகள், திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை மீள்நிறுவப்படுகின்றது. வெளிப்புறச் சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு இடமளிக்கும் வகையில் மதிப்புரைகள் செய்யப்படும் வரை இந்த ஆவணம் நடைமுறையில் இருக்கும். இந்த வெளியீடு ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மதிப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் தொடர்புடைய செயல்திறன் காலத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் மூலோபாயங்களும் - 2019, ஓகத்து

முகவுரை

கடந்த சில தசாப்தங்களாக சக்தித் துறையில் நாம் பல சாதனைகளை அடைந்துள்ளோம். மேலும், இலங்கையின் சக்தி துறையில் நாம் பல சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளோம். எமது நாடு முழுமையான மின்சார வசதியை அடைந்துள்ளதுடன் இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் மூலோபாயங்களும் (2008) என்ற ஆவணத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏனைய பல கொள்கை இலக்குகளையும் மைற்கற்களையும் அடைந்துள்ளது. குறைந்து வருகின்ற சக்தி பாதுகாப்பை கொண்ட உலகில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளத்தின் பாரிய பங்கைக்கொண்டு இலங்கை ஏனைய நாடுகளுக்கு மத்தியில் உயர்ந்த நிலையிலுள்ளது. நாட்டின் பொருளாதார மீள்திறத்தின் இந்த முக்கிய சிறப்பம்சத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளக்கூடிய உறுதியான ஒரு பொறுப்புணர்வுடன் எமது நாடு முன்னோக்கி நகர்கின்றது. நிலையான ஒரு பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் இந்தக் கொள்கைக் கூற்று நாட்டின் சக்தித் துறையினது எதிர்கால மார்க்கத்தை தெளிவாக குறிப்பிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல தசாப்த கால உள்ளக நெருக்கடிகளிலிருந்து மீண்டுவந்தாலும், முழு நாட்டிற்கும் இடையறாத மின்சார விநியோகத்தை வழங்கிவந்துள்ளது. நாடு முழுதிலுமுள்ள பாரிய மற்றும் சிறு அளவான நிறுவனங்கள் மின்சாரத்தின் கிடைப்புத்தன்மையுடன், மூலப்பொருட்களையும், மனித வளங்களையும் சிறந்த மற்றும் உற்பத்தித்திறனான விதத்தில் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றன. சகல பிரஜைகளுக்கும் நவீன சக்தி வடிவங்களுக்கான பிரவேசத்தைப் பெற்றுக்கொடுப்பதன் தேவையை உணர்ந்து, திரவநிலை மற்றும் எரிவாயு பெற்றோலிய எரிபொருட்கள் போன்ற ஏனைய சக்தி மூலங்களும் முழு நாட்டிற்கும் விநியோகிக்கப்படுகின்றன.

மொ. உ. உ. (GDP) இல் 60% வீதத்திற்கும் அதிகளவில் பங்களிக்கின்ற வலிமையான ஒரு சேவைத் துறையைக்கொண்டு, இலங்கை சாதுரியமான பொருளாதார அபிவிருத்திப் பாதையினூடாக தனது பயணத்தை தொடரும் என அபிவிருத்தி பொருளாதாரக் கட்டமைப்பு விதந்துரைத்துள்ளது. எவ்வாறாயினும், பொருளாதாரத்தின் சக்தி வலிமையை தற்போதைய உகந்த அளவுகளில் பேணுவதற்கும் உதவக்கூடிய எரிபொருள் மைய பொருளாதாரத்தை, அறிவை நோக்கிய பொருளாதாரமாக நெறிப்படுத்தும் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படு வருகின்றன. அடிக்கடி நிகழும் சக்தி நெருக்கடிகளினால் கட்டுண்டிருக்கின்ற உலகத்தில், சக்தியில் குறைந்தளவு தங்கியிருந்து, வலிமையான ஒரு பொருளாதாரமாக இலங்கையை வளர்த்தெடுப்பதற்கு இந்தக் கொள்கை வழிவகுக்கும்.

இந்தக் கொள்கை சக்திக் கைத்தொழிலை உலகலாவிய சக்திப் பரிவர்த்தனைக்கு நாட்டைத் தயார்படுத்துகின்ற தேசிய பொருளாதாரத்தின் ஒரு புத்தாக்க உந்துகைக்கான பொறுப்புடைய ஒரு மானியத்தால் சுமைப்படுத்தபட்ட உயிர் வாழ்வில் கவனம்செலுத்துகின்ற ஒரு நிலையிலிருந்து உயிர்ப்பாக மாற்றியமைக்கும். பிரஜைகளின் புதிய பொருளாதார சுதந்திரம் மக்களினால் செலுத்தப்படும் விலைகளின் செலவு பிரதிபலிப்பு எந்தவிதமான தயக்கமும் இன்றி ஏற்றுக்கொள்ளப்படும் அளவுக்கு சக்தி சார்ந்த சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு உகந்த சூழலை ஏற்படுத்தும். இந்தக் கொள்கை நீண்டகால அடிப்படையில், இலங்கை மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கக்கூடிய வகையில் சக்தித் துறையை வினைத்திறன் வாய்ந்ததாகவும் பயனுள்ளதாகவும் நிருவகிப்பதற்கு சக்தித் துறை தொழில் வல்லுநர்களின் ஆற்றலை வலுப்படுத்துவதன் மூலம், சக்தித் துறையை போஷித்து வளர்த்தெடுப்பதற்கும் துணையாக அமையும்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் மூலமாக சாத்தியமடைந்து நிதமும் வளர்ந்து வருகின்ற தொழில்நுட்ப ஆற்றல்களுக்கும் மற்றும் புதிய கூட்டிணைவு அளவுக்கும் மத்தியில், பரந்திருக்கும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் வகிபங்கு தேசிய சக்தி விநியோகத்தில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் பங்கை தக்கவைத்துக்கொள்வதற்கான முக்கிய உந்துகைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்படும். அதே போன்று, முழுப் பெறுமான சங்கிலியிலுமுள்ள சக்தி வினைத்திறன், அனுகூலமான அளவுகளில் சக்திக்கான கேள்வியின் அதிகரிப்பை பேணும் வகையில் மேம்படுத்தப்படும். இந்தக் கொள்கை முயற்சி காலநிலை மாற்றத்திற்கான ஒரு, ஒருமுகப்பட்டிருக்கின்ற அர்த்தமுள்ள பயனுள்ள ஒரு பதிலீட்டிற்கு, சக்திக் கைத்தொழிலின் சகல அக்கறையுடைய தரப்புகளினதும் முயற்சிகளை கூட்டிணைப்பதன் மூலமாக, காலநிலை மாற்றத்தினால் வரும் சவால்களை எதிர்நோக்குவதற்கு இலங்கையின் தெளிவான பொறுப்பை உத்தரவாதப்படுத்தும்.

1. **அறிமுகம்**

உலகளாவிய சக்தித் தொழிற்துறையானது, அதிகரித்து வருகின்ற வழங்கல் விருப்பத் தெரிவுகள், புதிய சக்தி காவிகள் மற்றும் வளர்ந்து வருகின்ற தேவைகள் என்பவற்றின் விளைவாக ஒரு மாற்றத்திற்கான தீர்மானம் எடுக்கும் கட்டத்தை அடைந்துள்ளது. ஏனைய பல நாடுகளைப் போரில் இலங்கையும் அடுத்த சில தசாப்தங்களில் இந்த மாற்றங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதுடன் மேலும் சக்தித் துறையில் ஏற்படுகின்ற இத்தகைய மாற்றமானது பல முதனிலை வாய்ப்புகளுக்கு வழிவகுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலிமை பெறச்செய்யும். சுற்றாடலுக்கு ஆகக்குறைந்தளவு சுமையுடன் அதிகளவான ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, தாங்கக்கூடிய வல்லமை மற்றும் நிலைபெறுதகு தன்மை என்பவற்றில் இலக்குக்கொண்டு, சக்தி நெருக்கடி நீங்கிய ஒரு எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் வகையில் சகல அரச மற்றும் தனியார் துறை தொழில்முயற்சிகளுக்கும், குடும்பங்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஒரு வளமான அத்திவாரத்தையிட்டு, தேசத்திற்கும் அதன் சமூக சந்தைப் பொருளாதாரத்திற்கும் வலுவூட்டுவதற்கான மாற்றத்தில் சக்தித் துறையை நெறிப்படுத்தும் வழிமுறைகளை இந்த சக்திக் கொள்கை எடுத்துரைக்கும்.

இலங்கை, ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்திச் சுட்டியில் நடுத்தர நிலையில் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கையின், ஆண்டு தலா மொ. உ. உ. சராசரியாக 4,065 அமெரிக்க டொலர் அளவில் காணப்படுகின்றது (2017)[1]. இந்தத் தசாப்த காலத்தினுள் உயர்-நடுத்தர வருமான மட்டத்தை அடையும் அரசாங்கத்தின் முயற்சியானது இலங்கைப் பொருளாதாரத்தில் சக்தியின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தும். கடந்த மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், முன்னேற்றகரமான சமூக சந்தைப் பொருளாதாரத்தில் கால்பதித்துள்ள ஒரு தேசம் என்ற ரீதியில், படிப்படியான அணுகுமுறையிலும் பார்க்க, அபிவிருத்திற்கு முழுமையான அணுகுமுறை அனுகூலமாக இருக்கும். நாட்டின் ஒவ்வொரு சமூகப் பொருளாதார செயற்பாட்டிலும் சக்தித் துறையின் கணிசமான தாக்கங்கள் காணப்படுவதால், சமூகப் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளோடு இசைந்த ஒரு சக்தி கொள்கை அவசியமாகும்.

இலங்கை ஒப்பீட்டளவில் குறைந்த சக்தி செறிவுடைய பொருளாதாரத்தை பேணுகிறது. அதாவது, ஒரு மில்லியன் இலங்கை ரூபா அளவான மொ. உ. உ. ஐ உற்பத்தி செய்வதற்கு, 0.47 TJ அளவான வர்த்தக சக்தியைப் பயன்படுத்துகின்றது[2]. பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் அதே வேளையில் குறைந்தளவு சக்தி செறிவை பேணுவது இலங்கைக்குள்ள சவாலாகும். இலங்கை 100% மின்சார வசதியளித்தல் எனும் முக்கிய "மைல் கல்லை" அடைந்தன் மூலமாக சகல பிரஜைகளுக்கும் நவீன சக்தி மூலங்களை வழங்குதல் எனும் இலக்கை பூர்த்தியாக்கி இருக்கிறது.

பொதுவான பிரவேசத்தின் மத்தியிலான பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தும் அதிகரித்த சக்தி விநியோக கொள்ளாற்றலை தேவைப்படுத்துகின்றது. சக்தி மாற்றீட்டின் வினைத்திறனை மேம்படுத்தி, கேள்வி அதிகரிப்பை சமாளிக்க முடியும். குறைந்தளவான ஒரு சக்தி செறிவு நிலையை பேணுவதற்கான தொடர் முயற்சிகள் பொருளாதாரத்திலும் அதே நேரம் சுற்றாடலிலும் குறைந்தளவு சுமையை ஏற்படுத்த தேவைப்படுத்துகிறது. அதிக பொருளாதார வளர்ச்சிக்கு மத்தியில் இந்தக் குறிக்கோளை அடையும் நிமித்தம், ஊக்குவிப்புகள் மைய கொள்கையினூடான கேள்வி முகாமையில் அதிகரித்த முயற்சிகள் தேவைப்படுத்தப்படும்.

வர்த்தக அளவில் அதிகளவு சக்தியை நுகரும் போக்குவரத்துத் துறையை வினைத்திறனுடன் முகாமை செய்வதற்கு சக்திப் பாவனையை பயனுள்ளதாக கட்டுப்படுத்தும் வகையிலான, கொள்கைத் தலையீட்டு நடவடிக்கைகளினூடாக பெற்றோலியம் சார் உற்பத்திகளுக்கு புறம்பாக ஏனைய சக்தி மூலங்களின் பாவனையை தூண்டுவதும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியுடன் கூடிய மிகவும் வினைத்திறன் வாய்ந்த முறைமைகளுக்கான போக்குவரத்து முறைகளை தரமுயர்த்தலும் அவசியமாகும்.

பெரும்பான்மையான நீர்மின் வளம் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளதால், நாட்டின் முதன்மை சக்திப் பிரிவில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் (மீ.ச.) ஒப்பீட்டளவிலான அதிக பங்களிப்பு தொடர்ச்சியாக குறைவதை தவிர்க்க முடியாது. வீட்டு சக்திப் பாவனை உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையை நோக்கி நகர்வதால், சகல வகையான சக்தி வடிவங்களதும் அதிகரித்து வரும் சக்தித்தேவை உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையைக்கொண்டு பூர்த்தி செய்யப்படுகின்றது. நீர் வளங்கள் பல்வேறு தேவைகளுக்கு பயன்படும், விவசாய தேவைக்கும் மற்றும் குடிநீருக்கும் அடுத்ததாக மூன்றாவது முன்னுரிமையாக மின்னுற்பத்தி விளங்குகிறது. அதிலும் மகாவலி II ஆம் கட்ட அபிவிருத்தி சிக்கல் தன்மை வாய்ந்ததாகும். கடந்த தசாப்தங்களில் 55% வீதத்தில் பேணப்பட்ட அளவில், ஆரம்ப சக்தி விநியோகத்தில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திகளின் பங்களிப்பை பாதுகாப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் ஒரு முன்மாதிரியான கொள்கை நகர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

---

[1] உலக வங்கி http://data.worldbank.org/country/sri-lanka

[2] இலங்கை சக்தி சமநிலை 2016, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

நம்பத்தகுந்த, வினைத்திறனூடான செலவு, போட்டி ரீதியான விலை நிர்ணயம் பெறும் சக்தி சேவைகளின் விநியோகத்திலிருந்து பல்வகை சக்தி மூலங்களை சமூக சந்தை பொருளாதாரத்திற்கு பல்லினப்படுத்தும் கருமத்தை உறுதிசெய்யும் நிமித்தம், சக்தித்துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிருவகித்தல் ஆகிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கை, திட்டங்களை எவ்வாறு வகுக்க வேண்டும் என்ற அம்சங்களை, தேசிய சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயங்கள் முன்வைக்கின்றன.

ஆழ்ந்த பல பின்னணிகளிலிருந்து தளம்பல் ஏற்பட்டதன் காரணமாக, இலங்கை கடந்த ஒரு சில தசாப்தங்களாக பல சக்தி நெருக்கடிகளை எதிர்நோக்கியது. நாட்டின் சிறு புவியியல் பரப்பு மற்றும் அதன் மக்களின் சிக்கனம் வாய்ந்த வாழ்க்கை முறையுடன் இணைந்திருக்கும் உயிர்த்திணிவு சக்தி வளங்கள், ஆண்டு முழுவதற்குமான சூரியவொளி, அதிக மழைவீழ்ச்சி என்பவற்றின் குறிப்பிடத்தக்களவு பாவனையாக இந்த அடிப்படைகளை இனங்காணலாம்.

இந்த ஆழ்ந்த அடிப்படைகளிலிருந்து தேசிய பொருளாதாரம் போஷிக்கபட்டுள்ளதால், நாட்டிற்கு தொடர் மின்சார விநியோகத்தை வழங்குவதில் தேசிய மின்சார விநியோக பரப்பை விரிவுபடுத்துவதில், இலங்கை, பிராந்தியத்தில் பலனை அறுவடைசெய்யும் முதலாவது நாடாக விளங்கியது. சக்தியின் ஆகக்குறைந்த சாத்தியமான உள்ளீட்டைக் கொண்டு, சக்தி முறைமைகளின் நம்பத்தகுதன்மை, நாட்டிற்கு அதிக பொருளாதார நன்மைகளை வலுப்படுத்தி, நாட்டிற்கான சேவைகள் துறையை ஈர்த்துள்ளது. பொருளாதார சக்தி செறிவில் நிலையான வளர்ச்சியை அனுபவித்து வருகின்ற ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களுடன் கூர்ந்து ஒப்பிடும் போது, இது சேவைகளை நோக்கிய பொருளாதாரத்தில் ஒரு கட்டமைப்பு சார்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுதேசிய மற்றும் பூகோள சக்தி விநியோகங்களின் நம்பத்தகு தன்மையும் மற்றும் விலையை சுமக்கக்கூடிய தன்மையும் மாறுநிலையிலுள்ள இந்த பொருளாதாரத்தில் மிகவும் விரும்பத்தகுந்த கூறுகளாகவிளங்கும். காற்று மற்றும் சூரியவொளி போன்ற மின்னுற்பத்தியில் கடும் முனைப்பு இருக்கக்கூடிய போட்டி ரீதியில் அதிகரித்து வருகின்ற புதிதாக மதிப்பிடப்படும் வளங்களின் அபிவிருத்தியிலான ஒரு எதிர்காலம் பற்றி நாடு ஆராய்ந்து வருகின்றது. அநேகமாக மிகவும் முக்கியமான சக்தி வளமாக விளங்குகின்ற உயிர்த் திணிவு சக்தி, தொழில்துறை அனல் சக்தி விநியோகத்திற்கு தங்கியிருக்கக் கூடிய மற்றும் வீட்டு சக்திப் பாவனைக்கான ஒரு சக்தி வளமாகிய ஒரு எரிபொருளின் பாவனைக்கு பரிவர்த்தனை செய்வதன் மூலமாக, மேலும் அதிகளவு பெறுமதி வாய்ந்த பங்களிப்பை செய்யும்.

பெருமளவு சுதேசிய வளங்களை பயன்படுத்துவதற்கான மூலோபாயங்கள் மற்றும் சக்தி மாற்றுத் தொழில்நுட்பங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்து "சக்தியில் வலிமையான" ஒரு நாடாக உயர்ந்து விளங்குவது இலங்கையின் அபிலாஷையாகும். மேல்நிலைப் பெற்றோலிய வள அபிவிருத்தியிலிருந்து கீழ் நிலைப் பெற்றோலிய வள அபிவிருத்திற்கு பல்லினப்படுத்தும் வகையில் பெற்றோலியத் துறையை வலுப்படுத்தும் நிமித்தம் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில், மின்சாரத்தின் நிலையையும் ஒரு பெரும் சக்திக் காவியாக உயர்வடையச்செய்வதற்கான முயற்சிகளும் கூட மேற்கொள்ளப்படும். திரவநிலை பெற்றோலிய ஆதிக்கத்திலிருந்து ஏனைய சக்திக் காவிகளுக்கு, போக்குவரத்துத் துறையிலுள்ள சக்திப் பரிவர்த்தனை காத்திரமாக ஊக்குவிக்கப்படும். பூகோள வளங்களுக்கான சக்தி விநியோக மார்க்கங்களை பாதுகாக்கும் அதே வேளையில், சுதேசிய வளங்களின் அளவுகளை அதிகரிப்பதில் வளங்களை ஈர்க்கும் புதிய சக்திக் காவிகளை புதிதாகக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி ஆய்வில் மின்சக்தித் துறை, புகழ் பெறும். எரிவாயு முனையங்கள், மின்னுற்பத்தி ஸ்தலங்கள் மற்றும் மின்சார செலுத்துகை மார்க்கங்கள் போன்ற முக்கியமான சக்தி உட்கட்டமைப்பு சார் பிரிவுகளுக்கு தேவையான காணி வளங்கள் பெற்றுக்கொள்ளப்படும் அதே வேளையில், சக்திக் களஞ்சியம், பாரம்பரிய சக்தி முறைமைகளை கட்டுப்படுத்தி, இடவசதிகளையும் கால வரையறைகளையும் அதிகரிப்பதற்கான ஒரு அடிப்படைக் காவியாக கருதப்படும்.

ஐ. நா. அமைப்பின் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) 7-வது இலக்கை இணையாக அமையும் வகையில், அதாவது ஐ. நா. இலக்கினது ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர், 2020 ஆம் ஆண்டளவில் அனைவரும் சுமக்கக் கூடிய விலையில், நம்பத்தகுந்த, நிலையான, அனைவருக்கும் கிடைக்ககூடிய நவீன சக்தியை அடையக்கூடிய வகையில், இந்த சக்திக் கொள்கை பங்களிப்பு செய்யும். இலங்கை உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் தங்கிருக்கும் தன்மையை முதன்மைச்சக்தி விநியோகத்தின் 50% வீதத்திற்கு கீழான ஒரு நிலைக்குக் குறைப்பதற்கும், 2015 ஆம் ஆண்டளவில் சகல முடிவுப் பாவனைகளிலும் நிலவிய 20% என்றளவான சக்திப் பாவனையை 2030 ஆம் ஆண்டளவில் குறிப்பாக குறைப்பதற்கும், இந்த சக்திக் கொள்கை பங்களிப்புச்செய்யும். காபன் சமநிலையை அடைவதில் இலங்கைக்கு இருக்கின்ற நோக்கத்தையும் மற்றும் 2050 ஆம் ஆண்டளவில் முழு சக்திப் பெறுமான சங்கிலிகளினதும் பரிவர்த்தனையின் தேவையையும் உணர்த்துவதற்கு, இந்த சக்திக் கொள்கை வழிவகுக்கும். ஐ. நா. இன் SDG குறிக்கோள்களின் 7 ஆவது இலக்குக்குஅமைய அறிவு உற்பத்திகளையும், நிலைபெறுதகு சக்தித் தொழில்நுட்பங்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலம், தென் பிராந்திய-தென் கூட்டுறவினூடாக, அபிவிருத்தி அடைந்து வரும் ஏனைய நாடுகளுடனான எதிரிணை வாய்ந்த உறவுகளுக்கும், உள்நாட்டு சந்தைக்கும் நிலைபெறுதகு சக்தித் தொழில் நுட்பங்களை வழங்குகின்ற முக்கியமான உற்பத்தித் தொழிற்சாலைகளை தாபிப்பதற்கு தேவையான இடவசதிகளை ஏற்பாடு செய்வதற்கு இந்த சக்திக் கொள்கை துணையாக அமையும்.

இந்தக் கொள்கை ஆவணம் பின்வரும் மூன்று பிரிவுகளை உள்ளடங்கி இருக்கும் :

தேசிய சக்திக் கொள்கை : கொள்கை சட்டகத்தின் பத்துத் தூண்களையும் குறிக்கும்

செயற்படுத்தும் மூலோபாயங்கள் : கொள்கையை செயற்படுத்தல் தொடர்பான குறித்த மூலோபாயங்களை விவரித்தல்

முடிவுகள் விநியோக சட்டகம் : செயற்பாடுகள், மைல்கல்கள் மற்றும் பொறுப்புடைய நிறுவனங்கள் முதலிய விடயங்களை விவரித்தல்

அவ்வப்பொழுது வெளியிடப்பட்டுள்ள முன்னைய சகல கொள்கைகளையும், மூலோபாயங்களையும், திட்டங்களையும், வழிகாட்டல்களையும் இந்தக் கொள்கை மேலோங்கிநிற்கும். இந்தத் தேசிய சக்திக் கொள்கை மற்றும் செயற்படுத்தும் மூலோபாயங்கள், வெளிக்கள சூழலில் ஏற்படும் ஏதாவது பாரிய மாற்றங்களை கருத்திற்கொண்டு, மீளாய்வு செய்யப்படும்வரை செயல்வலுப் பெற்றிருக்கும். அத்தகைய கொள்கை மீளாய்வுகள் குறைந்த பட்சம், ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும். முடிவுகள் விநியோக சட்டகம் (தனித்தனியாக வெளியிடப்படும்) கொள்கை மற்றும் மூலோபாயங்கள் என்பவற்றுக்கு இணங்க, இரண்டு ஆண்டு இடைவெளிகளில் மீளாய்வுசெய்யப்படும்.

2. தேசிய சக்திக் கொள்கை

இலங்கையில் சமூக ரீதியான சமத்துவம் வாய்ந்த அபிவிருத்திற்கு உதவும் வகையில் பொருத்தமான, விலையில் மலிவான சக்தி சார்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு தூய்மையான, பாதுகாப்பான, சிக்கனமான மற்றும் நம்பத்தகுந்த விநியோகங்களின் ஊடாக, சக்தி பாதுகாப்பை உறுதிசெய்தல் தேசிய சக்திக் கொள்கையின் அடிப்படை குறிக்கோளாகும். ஒவ்வொரு உப துறைக்கும் வெளியிடும் நிமித்தம் சட்டமுறையாக தேவைப்படுத்தும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு மின்சார தொழில் துறை பற்றிய பொதுவான கொள்கை வழிகாட்டல்கள் போன்ற கொள்கை வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு, இந்த தேசிய சக்திக் கொள்கையினது அடிப்படையில் வெளியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

பாதுகாப்பு, சமத்துவம் மற்றும் நிலைபெறுதகுதன்மை முதலிய பரிமாணங்களிலிருந்து வித்தியாசப்படும் கேள்விகளினூடாக தொழிற்பட்டு, இலங்கை இன்று இந்த மூன்று சக்திகளினதும் நெகிழ்தன்மை வாய்ந்த சமநிலையிலிருந்து நகர இருப்பதாக தென்படுகின்றது. ஆதலால், முறையே மேம்பட்ட சமத்துவம், பாதுகாப்பு மற்றும் நிலைபெறுதகு தன்மை முதலிய அம்சங்களினூடாக சக்திகளை சமநிலைப்படுத்துவதற்கான முயற்சியில் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பரந்த பத்து தூண்களில், தேசிய சக்திக் கொள்கை நிலைத்திருக்கின்றது.

1. சக்தி பாதுகாப்பை உறுதிசெய்தல்
2. சக்தி சார்ந்த சேவைகளுக்கு பிரவேசத்தை வழங்குதல்
3. தேசிய பொருளாதாரத்திற்கு சக்தி சார்ந்த சேவைகளை அனுகூல செலவில் வழங்குதல்
4. சக்தி வினைத்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்
5. தற்சார்பை மேம்படுத்துதல்
6. சுற்றாடலை பராமரித்தல்
7. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் பங்களிப்பை அதிகரித்தல்
8. சக்தி துறையில் நல்லாட்சியை வலுப்படுத்துதல்
9. எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு காணிகளை பெற்றுக்கொள்ளல்
10. புத்தாக்கத்திற்கும் தொழில் முனைவுக்கும் வாய்ப்புகளை அளித்தல்

இந்த அணுகுமுறை கீழ்காணுமாறு வரைபு ரீதியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது :-



குறித்த பத்து தூண்களும் விரிவாக கீழே விவரிக்கப்பட்டுள்ளன :-

1. **சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்தல்**

தொடர்ச்சியாகவும், போதுமானதாகவும் தன்மையையும் மற்றும் நம்பத்தகுதன்மையையும் உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், நாட்டின் முதனிலை மற்றும் இரண்டாம்நிலை சக்தி விநியோகங்கள் பேணிப் பாதுகாக்கப்படும்.

2. **சக்தி சார்ந்த சேவைகளுக்கான பிரவேசத்தை வழங்குதல்**

சகல பிரஜைகளும் அவர்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் பயனுள்ள பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் நம்பத்தகுந்த, பொருத்தமான, மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய, சமத்துவமானதும் தரமானதுமான சக்தி சார்ந்த சேவைகளுக்கான பிரவேச வசதி அளிக்கப்படும்.

3. **தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் சக்திச் சேவைகளை வழங்குதல்**

உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களினதும் மற்றும் சர்வதேச சந்தைகளில் கிடைக்கக்கூடிய சேவைகளினதும் போட்டித்தன்மையை அடைந்துகொள்வதற்கும், தேசிய பொருளாதாரத்தில் சுமையை குறைப்பதற்கும் அனுகூலமான நீண்டகால செலவில், சக்திச்சேவைகள் வழங்கப்படும்.

4. **சக்தி வினைத்திறனையும் சக்திப் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்**

விநியோகத் தரப்புகள் மற்றும் பாவனையாளர்கள் ஆகிய இரு தரப்புகளையும் ஈடுபடச்செய்வதனூடாக, சகல துறைகளிலும் மற்றும் சக்திப் பெறுமானச் சங்கிலி முழுவதிலும் சக்தியின் வினைத்திறன் பாவனை ஊக்குவிக்கப்படும்.

5. **தற்சார்பை மேம்படுத்துதல்**

சக்தி விநியோகங்களினால் புறவயச் சூழலை பாதிக்கக்கூடிய அளவை குறைக்கும் நோக்கில், தொழில்நுட்ப, பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக மட்டுப்பாடுகள் தீர்க்கப்படும் என்பதற்கு அமைய, இறக்குமதி செய்யப்படும் வளங்களில் தங்கியிருக்கும் தன்மையை குறைக்கும் வகையில், சுதேசிய சக்தி வளங்கள் உகந்த அளவுகளுக்கு அபிவிருத்தி செய்யப்படும்.

6. **சுற்றாடலைப் பராமரித்தல்**

இலங்கையின் சக்தித் துறையில் குறைந்த காபன் செறிவை பேணிக்காத்தல் மூலமே காலநிலை மாற்றத்திற்கான அர்த்தமுள்ள ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உலகளாவிய மற்றும் உள்ளூர் சுற்றாடல் பாதுகாப்பு பேணும் வகையில், சக்தி சார்ந்த சேவைகளின் பாதகமான சுற்றாடல் மற்றும் சமூகத் தாக்கங்கள் குறைக்கப்படும்.

7. **மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் பங்களிப்பை அதிகரித்தல்**

சக்தித் துறையில் நிலைபெறுதகுதன்மையையும் அதிக மீள்திறன் அளவையும் பேணும் நிமித்தம், மீளப்புதுப்பிக்கத்தகு சுதேசிய சக்தி வளங்கள் உகந்த மட்டத்திற்கு அபிவிருத்தி செய்யப்படும்.

8. **சக்தித்துறையில் நல்லாட்சியை வலுப்படுத்துதல்**

முதலீட்டு தரப்பினதும் மின்சார நுகர்வோரினதும் நம்பிக்கையை வென்றெடுக்கும் முகமாக, பொறுப்புக்கூறும் தன்மையையும், நியாயத் தன்மையையும் மற்றும் வெளிப்படைத்தன்மையையும் உணர்த்தக்கூடியவாறு, சக்தித் துறை ஆட்சி வலுப்படுத்தப்படும். நிலையான ஒரு கொள்கை சூழல் உறுதி செய்யப்படுவதுடன் சக்தித் துறையில் நல்லாட்சியை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு, ஒரு ஒழுங்குமுறைச் சட்டகம் மேலும் வலுப்படுத்தப்படும்.

9. **எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு காணிகளை பெற்றுக்கொள்ளல்**

சக்தி சார்ந்த வசதிகளையும் மற்றும் அணுகுமார்க்கங்களையும் தாபிப்பதற்கான அத்தகைய வசதிகளுக்குரிய மூலோபாய ரீதியான அமைவிடங்கள் முன்கூட்டியே ஒதுக்கீடு செய்யப்பட்டு, அத்கையவசதிகளின் சரியான உரியகால செயற்படுத்துகையை உறுதிசெய்வதற்கும் மற்றும் சமூக பாதிப்பை குறைப்பதற்கும் அத்தகைய காணிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

10. புத்தாக்கத்திற்கும் தொழில் முனைவுக்கும் வாய்ப்புகளை அளித்தல்

தொழில்நுட்ப செறிவுள்ள உள்ளூர் வர்த்தகங்களை வளர்ப்பதற்கு இலங்கையில் கிடைக்கக்கூடிய மட்டுப்பாடுடைய சந்தை வாய்புகளை கருத்திற்கொண்டு, சக்தித் துறையின் ஒப்பீட்டு ரீதியில் பாரியளவான சக்தி வளங்கள், உள்ளூர் தொழில் முனைவுக்கும் புத்தாக்கங்களையும் வளர்த்து போஷிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

3. செயற்படுத்தும் மூலோபாயங்கள்

மேற்குறிப்பிட்ட பத்து முக்கியமான தூண்களுடன் இசைந்ததான தேசிய சக்திக் கொள்கையை செயற்படுத்துவது தொடர்பான பரந்துபட்ட மூலோபாயங்கள் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

3.1 சக்தி பாதுகாப்பை உறுதிசெய்தல்

மூலோபாயங்களை பயன்படுத்தி நாட்டின் சக்தி விநியோகத்தினது நம்பத்தகுதன்மை, தொடர்தன்மை, போதியதன்மை மற்றும் மூலோபாய சுயாதீனம் முதலிய அம்சங்களை உச்சப்படுத்தும் பொருட்டு, நாட்டில் பயன்படுத்தப்படும் ஆரம்ப மற்றும் துணை சக்தி வளங்களும், விநியோகங்களும் பாதுகாக்கப்படும்.

3.1.1 பொருளாதார, சுற்றாடல், தொழில்நுட்ப மற்றும் செயற்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகளுக்கு அமைவாக, மின்சக்தி உற்பத்தியில் பயன்படும் சக்தி வளங்களின் பல்லினத்தன்மை உறுதிசெய்யப்படும்.

3.1.2 அண்மை கால விலை விபரக்குறிப்புகளை கருத்திற்கொள்கின்ற போது, நாடு பன்முகத்தன்மையை விஸ்தரிப்பதற்கு அடுத்த உயிர்ச்சுவட்டு எரிபொருள் தெரிவாக இருப்பது இயற்கை எரிவாயுவாகும். உகந்த அளவிலும் தொழில்நுட்பத்திலுமான ஒரு திரவநிலை இயற்கை எரிவாயு (LNG) முனையம் மிக பொருத்தமான இடத்தில் தாபிக்கப்படும். நாட்டின் சக்தி பாதுகாப்பு மீதான தாக்கங்களை கருத்திற்கொண்டு, முதலாவது முனையத்தின் இயக்கச் செயற்பாடும் LNG கொள்முதலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

3.1.3 வெளிக்கள பூகோள அரசியல் கலாசாரத்தின் நிச்சயமற்ற தன்மைகளுக்கு எதிராக, சக்தி விநியோகச் சங்கிலியைப் பாதுகாக்கும் நிமித்தம் சக்தி வளங்களின் பூகோள பல்லினத்தன்மை தொடர்ந்தும் பேணப்படும்.

3.1.4 பூகோள அரசியலில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் எரிபொருள் விலை திடீர் மாற்றங்கள் என்பவற்றுக்கு எதிராக பாதுகாப்பு வழங்கும் நிமித்தம், இறக்குமதி செய்யப்படும் ஒரு தனி எரிபொருளிலிருந்து நிறுவப்படும் மின்னுற்பத்தி கொள்ளளவு சதவீதம், நிறுவனத்தின் மொத்த நிறுவப்பட்ட உற்பத்திக் கொள்ளளவின் 50% வீதத்தை விஞ்சிச்செல்லக் கூடாது.

3.1.5 யாதாயினும் எதிர்கால இடைநேர்த் தேவைகளைப் அடையும் பொருட்டு, மின்சார விநியோகம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகிய இரண்டு வலையமைப்புகளிலும் மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு உட்கட்டமைப்பு வசதிகளின் போதிய தன்மையும் மற்றும் நம்பத்தகு தன்மையும் உறுதிசெய்யப்படும்.

3.1.6 சக்தித் துறையின் செயல்திறனை கடுமையாகப் பாதிக்கக்கூடிய சாத்தியமான உள்ளக மற்றும் வெளிக்கள இடைநேர் நிகழ்வுகளை இனங்கண்டு அவற்றைக் குறைக்கும் நிமித்தம் தொடர்ச்சியான இடர் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.1.7 புவிப் பௌதிகவியல் ஆய்வுகளை பயன்படுத்தி, உள்ளூர் பெற்றோலிய வளங்கள் குறித்த ஆராய்ச்சி செய்யப்படும். இதன்மூலம் தேசிய பெற்றோலிய தரவுகள் களஞ்சியம் மேலும் வலுப்படுத்தப்படும். ஹைட்ரஜன் மற்றும் திரவநிலை எரிவாயு (GTL) போன்ற எதிர்கால தூய சக்தி மூலங்களை உருவாக்கக்கூடிய மற்றும் மின்னுற்பத்தி, போக்குவரத்து, வீடு மற்றும் தொழில்துறை ஆகிய சகல துறைகளிலும் அறிமுகப்படுத்துவதற்கும் அத்தகைய வளங்கள் மூலோபாய ரீதியில் அபிவிருத்தி செய்யப்படும்.

3.1.8 நிரூபணமான மின்னுற்பத்தித் தொழில்நுட்பங்களையும் எரிபொருள் வளங்களையும் கொண்டு, மின்சாரத்திற்கான தேசிய தேவைகள் அடையப்படும்.

3.1.9 நாட்டிலுள்ள மூலேபாய இடவமைவுகளில் காணப்படும் மூலேபாய ரீதியிலான எரிபொருள்களை பராமரித்தல் பெற்றோலிய மற்றும் மின்சார தொழில்துறைகளில் ஈடுபடுகின்ற முக்கியமான சகல தரப்புகளுக்கும் கட்டாயப்படுத்தப்படும்.

3.1.10 வெவ்வேறுபெற்றோலிய உற்பத்திகளின் நிமித்தம், நாட்டின் தேவையை உகந்த நிலையில் திருப்தியாகப் பூர்த்தி செய்யும் பொருட்டு, உள்நாட்டு மசகெண்ணெய் சுத்திகரிப்பு கொள்ளளவு ஆற்றல் மேலும் விஸ்தரிக்கப்படும்.

3.1.11 பிராந்தியத்தில் நாடுகளுடனான சாத்தியமுடைய எல்லை கடந்த மின்சார செலுத்துகை மற்றும் கூட்டுறவு என்பன பல பன்முக மின்சக்தி கொத்தணிகளின் இயக்கச் செயற்பாட்டு அடிப்படையில் தொடர்ந்தும் பேணப்படும்.

3.2 சக்தி சார்ந்த சேவைகளுக்கான பிரவேசங்களை வழங்குதல்

மூலோபாயங்களைப் பயன்படுத்தி, சகல பிரஜைகளுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்திக் கொள்வதற்கும் மற்றும் இலாபம் தரக்கூடிய பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வகையில் நம்பத்தகுந்த, சௌகரிகமான, சுமக்கக்கூடிய விலையில், சமத்துவமான முறையில், தரமான சக்தி சேவைகளுக்கான பிரவேசம் வழங்கப்படும்.

3.2.1 ஒன்-க்றிட் அல்லது ஒப்-க்றிட் சக்தி மூலங்களை பயன்படுத்தி மின்சாரத்திற்கும் நவீன பெற்றோலிய உற்பத்திகளுக்குமான பிரவேசம் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் உறுதிசெய்யப்படும்.

3.2.2 கட்டணங்களினூடாக ஆரம்ப மின்சார சேவை இணைப்பு செலவுகளின் பாகத்தை சமூகமயமாக்குவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கப்படும்.

3.2.3 பிரவேசம் கிடைத்ததன் பின்னும், விலையை தாங்கக்கூடிய ஆற்றலில்லாத காரணத்தினால் தேசிய மின்பரிமாற்ற கட்டமைப்புடன் இன்னும் இணையாத பல குடும்பங்கள் புத்தாக்க நிதியீட்டல் திட்டங்களை பயன்படுத்தி தேசிய மின்பரிமாற்றக் கட்டமைப்புடன் இணைக்கப்படும்.

3.2.4 விவசாய, கிராமிய மற்றும், ஆரம்பக் தொழில் துறைகள் என்பவற்றிலுள்ள மின்சாரத்திற்கான புதிய உற்பத்தித்திறன் வாய்ந்த பாவனைகள், பெண்களையும் மற்றும் இளைஞர் யுவதிகளையும் ஊக்குவிப்பதிலான முக்கியத்துவத்தைக் கொண்டு வலுவூட்டப்படும்.

3.2.5 மின்சாரம், எரிவாயு மற்றும் எண்ணெய் பயன்பாடுகள் மூலம் வழங்கப்படும் சக்தி சேவைகளின் விநியோகத் தரம், பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக தர நியமங்களைப் பின்பற்றுவதனூடாக மேம்படுத்தப்படும்.

3.2.6 பொதுப் பயன்பாட்டு சேவைகளுக்கு ஆகக்குறைந்த சேவைத்தர நியமங்கள் அறிமுகப்படுத்தப்படும். இது தவிர, உயர் சேவை தர நியம அளவுகளுக்கு கட்டணத்தை செலுத்த விரும்புகின்ற வாடிக்கையாளர்களுக்கு தவணைக்கட்டண ரீதியான சேவைகளும் வழங்கப்படும்.

3.2.7 மின்சார விநியோக சங்கிலியின் பொருத்தம், ஒருங்கிணைத்தல் இலகு மற்றும் சக்தி வழங்கலின் பாதுகாப்பு முதலிய அம்சங்களை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், மின்சார விநியோக சங்கிலியின் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நியமப்படுத்தப்படும்.

3.2.8 மிக உன்னத நம்பகத்தகுதன்மை, அதிகரித்த பாதுகாப்பு மற்றும் மரங்கள் மூடிவளர்வதால் ஏற்படுகின்ற குறுக்கீடுகளை குறைத்தல் முதலிய விடயங்களை கருத்திற்கொண்டு, மின்சார பகிர்ந்தளிப்பு வலையமைப்புகள் நகரப் பகுதிகளில் படிப்படியாக நிலக்கீழ்படுத்தப்படுகின்றன. அத்தகைய மின்சார பகிர்ந்தளிப்பு வலையமைப்புகள் ஏனைய பிரதேசங்களில் காப்பிட்டு திரட்டிய வான்வெளி கடத்திகளுக்கு (ABC) மாற்றப்படும்.

3.2.9 பாவனையாளர் அந்தங்களில், உகந்த மின்சார பகிர்ந்தளிப்பு வலையமைப்புகளை ஊட்டும்வகையில், தொழில்துறைகள் மற்றும் வீடுகள் ஆகிய துறைகளின் மூலமாக பிரவேசத்தை மேம்படுத்தும் நிமித்தம், குழாய் மார்க்கமாக எடுத்துச்செல்லல் மற்றும் வாகனங்கள் மூலமாக எடுத்துச்செல்லல் ஆகிய செயற்பாடுகள், நிலகீழ் எரிவாயு மற்றும் எண்ணெய் விநியோக பிரிவில் ஊக்குவிக்கப்படும்.

3.2.10 ஸ்மார்ட் க்றிட் தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஆட்களால் கையாளப்படும் தலையீட்டு நடவடிக்கைகள் சிக்கனமற்றதாக காணப்படுவதால், அத்தகைய தலையீடுகளை குறைத்து தானியக்க மின்சார முறைமை மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றின் நிமித்தம் ஸ்மார்ட் மாணிவாசிப்புகள் பயன்படுத்தப்படும்.

3.2.11 வாடிக்கையாளர்களின் சௌகரிகத்தை அதிகரிக்கும் பொருட்டு, கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தள அடிப்படையிலான சேவை வசதிகள் அறிமுகப்படுத்தப்படும்.

3.3 தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் சக்திச் சேவைகளை வழங்குதல்

உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் போட்டித்தன்மையை பேணுவதற்கும் மற்றும் தேசிய பொருளாதாரத்திலுள்ள சுமையை குறைப்பதற்கும், மூலோபாயங்களைப் பயன்படுத்தி, அனுகூலமான நீண்டகால செலவில், சக்தி சார்ந்த சேவைகள் வழங்கப்படும்.

3.3.1 நீண்டகால மின்னுற்பத்தி விரிவாக்கல் திட்டங்களில் இனங்கண்டறிந்த மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள் அவ்வாறே திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்தப்படும்.

3.3.2 பெற்றோலிய துறையின் பெற்றோலிய கிடைப்பனவு, பதனிடுதல் களஞ்சியப்படுத்துதல், எடுத்துச்செல்லல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய செயற்பாடுகள்பற்றிய ஆற்றல் தேவைப்பாடுகள் நீண்டகால மின்னுற்பத்தி திட்டத்தில் இனங்காணப்படும். பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகளின் போதிய விநியோகத்தை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், அத்தகைய ஆற்றல் தேவைப்பாடுகள் உரிய காலத்தில் அபிவிருத்தி செய்யப்படும். நாட்டினது பெற்றோலிய உற்பத்திகளின் விநியோகத்தை உறுதிசெய்யும் நிமித்தம் உரிய காலத்தில் அத்தகைய ஆற்றல் அபிவிருத்தி செய்யப்படும்.

3.3.3 துறை சார்ந்த நிறுவனங்களின் நிதி வலிமையை உறுதி செய்வதற்கும் மற்றும் வீணான சக்தி பாவனையை தவிர்ப்பதற்கும் ஏற்கெனவேயுள்ள ஒழுங்குமுறை பொறிமுறைகள் மற்றும் புதிய ஒழுங்குமுறை பொறிமுறைகள் ஆகியவற்றினூடாக, சக்தியின் பெறுமான சங்கிலி முழுதிலும், ஒத்தீட்டு செலவு கோட்பாடுகளின் அடிப்படையில், நியாய சக்தி விலை நிர்ணய மூலோபாயங்கள் பின்பற்றப்படும்.

3.3.4 தேசிய பொருளாதார அபிவிருத்தி முந்துரிமைகளின் நிமித்தம் தமது பொருளாதார நிலைக்கு பங்களிப்பதில் விசேட கவனத்தை தேவைப்படுத்தும் வீட்டுத்துறை, தொழில்துறை மற்றும் வர்த்தகத்துறை ஆகிய துறைகளிலுள்ள சக்தி பாவனையாளர் குழுக்களை இலக்காகக்கொண்டு, வெளிப்படையாக நிதியளித்த மானியங்களை இனங்கண்டு, அரசாங்கம் அத்தகைய மானியங்களை வழங்கும்.

3.4 சக்தி வினைத்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்

சக்தியின் வினைத்திறன் வாய்ந்த பாவனையையும் மற்றும் சக்தியின் பாதுகாப்பையும் உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், சக்தி முறைமைகள் பயனுள்ள விதத்தில் நிருவகிக்கப்படும். உகந்த மூலோபாயங்களை பயன்படுத்தி, நிறுவனங்கள் முதல் இறுதி வாடிக்கையாளர்கள் வரை சம்பந்தப்படுகின்ற சகல தரப்புகளின் மூலமாகவும், சக்தியின் வினைத்திறன் வாய்ந்த பாவனை பின்பற்றச் செய்யப்படும்.

3.4.1 வதிவிட, தொழில் துறை மற்றும் வர்த்தகக் துறைகளில் அக்கறையுடைய அனைத்துத் தரப்புகளையும் ஈடுபடுத்தி, தேசிய சக்தி வினைத்திறன் மேம்பாட்டு சக்தி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மேலும் வலுப்படுத்தப்படும்.

3.4.2 அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பசுமையான தூய பெறுகை நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல், ஆகக்குறைந்த சக்தி சார்ந்த செயல்திறனை நியமப்படுத்துதல், மின்னுபகரணங்களுக்கு சக்தி முத்திரையிடுவதை மேற்கொள்ளல் ஆகியவற்றினூடாக சக்தி வினைத்திறன் மேம்பாடும் சக்திப் பாதுகாப்பும் ஊக்குவிக்கப்படும்.

3.4.3 பெண்களை ஊக்குவிக்கும் நோக்கில், சக்தி வினைத்திறனையும் சக்தி பாதுகாப்பையும் உள்ளடக்கிய ஒரு வீட்டு மைய உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் முக்கிய கருப்பொருளாக ஆரம்பிக்கப்படும்.

3.4.4 வினைத்திறன் வாய்ந்த தொழில்நுட்பங்களுக்கான சந்தைக்கு உதவும் வகையில் வரிவிதித்தல், ஏனைய ஊக்குவிப்பு மற்றும் ஊக்குவிப்பு சாராத அம்சங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

3.4.5 சகல முடிவுப் பாவனைப் பிரிவுகளிலும் சக்தி வினைத்திறன், சக்திப் பாதுகாப்பு, சக்தி செலவு குறைப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு, சேவைகளை வழங்குகின்ற அரச மற்றும் தனியார் துறை தரப்புகளினூடாக சக்தி நிபுணத்துவம் சார்ந்த ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படும்.

3.4.6 நீர், பெறுமதி வாய்ந்த ஒரு சுதேசிய சக்தி மூலமாக இனங்காணப்படும். நீருக்கு அதிகளவான ஒரு சந்தர்ப்ப செலவு நிலவுகின்ற இடங்களிலுள்ள போட்டி வாய்ந்த பாவனையாளர்கள் மூலம் நீரின் வினைத்திறன் மேம்படுத்தப்படும்.

3.4.7 மின்னுற்பத்தி வசதிகளின் சக்தி மாற்றல் வினைத்திறன் மேம்படுத்தப்படும்.

3.4.8 வீதிகளை பயன்படுத்துவோரின் பாதுகாப்பை மேம்படுத்தும் மற்றும் மிகச்சிறந்த அழகியல் காட்சியுடையதாக சக்தியை பாதுகாப்பதற்கு பங்களிக்கும் வீதி ஒளியேற்றலின் சரியான முகாமைத்துவத்தை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு, வீதி ஒளியேற்றலுக்கான ஒரு மூலோபாய திட்டம் வகுத்தமைக்கப்படும்.

3.4.9 தானியக்க ரீதியிலான கேள்வி சார் பதிலீட்டுத் தொழில்நுட்பங்கள் முக்கியமான ஒரு கேள்விசார் முகாமைத்துவ மூலோபாயமாகக் கருதப்படும்.

3.4.10 மின்சார விநியோக வலையமைப்புகளில் நிகழும் மின்சார இழப்புகள் அனுகூலமான அளவுக்குக் குறைக்கப்படும்.

3.4.11 பெற்றோலிய சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் நிகழுகின்ற இழப்புகள் தொடர் தொழில்நுட்ப இற்றைப்படுத்தல் மற்றும் புதிய முதலீடுகள் என்பவற்றினூடாக குறைக்கப்படும்.

3.4.12 பெற்றோலியப் பகிர்ந்தளிப்பில் போக்குவரத்து எரிபொருள் பாவனை, புகையிரத மைய விநியோக வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள பிராந்திய களஞ்சிய வசதிகளை பயன்படுத்தி குறைக்கப்படும்.

3.4.13 பௌதீக ரீதியான நகர்வை குறைப்பதற்கான ஒரு மூலோபாயமாக நிறுவனம் சார்ந்த பணியாற்றுகின்ற கலாசாரத்திற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் செயலியல் அலுவலகங்களும் மற்றும் ஒளிநாடா/தொலைத்தொடர்பு ஊடாக கூட்டங்களை நடத்தும் வசதிகளும் ஊக்குவிக்கப்படும்.

3.4.14 தரத்தில் உயர்ந்த பொதுப் போக்குவரத்து வசதி மற்றும் துல்லியமான வாகனப் போக்குவரத்து முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றில் கடும் கவனத்தை செலுத்தி, "தவிர்த்தல், நகர்த்தல் மேம்படுத்தல்" எனும் மூலோபாயங்களை மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்திலுள்ள சக்தி பாவனை குறைக்கப்படும்.

3.4.15 ஸ்மார்ட் க்றிட் மின்சார முறைமைகளின் மூலமாக சேவைகள் வழங்கப்படும் நகரங்களாக இனங்கண்டறியப்பட்ட விஷேட பிராந்தியங்களில் லாஜிஸ்டிக் செலவுகள் முதல் மேம்பட்ட ஒருங்கிணைவுகள் வரை நன்மை அளிக்கும் வகையில், பொருளாதார செயற்பாடுகள் அடர்ந்த கொத்தணிகளில் அபிவிருத்தி செய்யப்படும்.

3.4.16 மின்சாரத்திற்கான கேள்வியைக் குறைக்கும் நோக்கில், நிலையான சுற்றுப்புறங்கள், நகர அபிவிருத்தியில் ஒரு முக்கிய வடிவமைப்பு அங்கமாக பயன்படுத்தப்படும்.

3.4.17 சக்தி வினைத்திறன் என்பது ஆதார நிர்மாணங்களில் முக்கியமான ஒரு கருசனையுடைய அம்சமாகும். புதிய கட்டிட வடிவமைப்புகள் அவற்றின் சக்தி செயல்திறனின் நிமித்தம் ஒரு கட்டாய அடிப்படையில் மதிப்பிடப்படும்.

3.4.18 மின்சார விநியோகத்தின் ஒட்டுமொத்த செலவுகளை குறைக்கும் வகையில் மின்சாரத்திற்கான கேள்வி பற்றிய குறிப்பு விபரங்களை திருத்தி, வாடிக்கையாளர்களுக்கு விலை சமிஞ்சைகளை கிட்டச்செய்யும் பொருட்டு, ஸ்மார்ட் மின்மாணி வாசிப்புக்கான ஸ்மார்ட் கட்டிடங்கள் மற்றும் முழுமையான சக்தி மாற்றம் என்பன அடங்கலாக ஸ்மார்ட் தொழில்நுட்பங்கள் உறுதிசெய்யப்படும்.

3.4.19 உயர் தொழில்நுட்பம் வாய்ந்த வாகனத் தொகுதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, வாகனங்கள் மீதான ஏற்புடைய வரிகளை நிர்ணயிப்பதில், வாகனங்களினது எரிபொருட்களின் வினைத்திறன் முக்கியமான ஒரு கருசனை அம்சமாக விளங்கும்.

3.5 **சுய நிர்ணயத்தை மேம்படுத்துதல்**

சக்தி விநியோகங்களினால் வெளிக்கள சூழலை பாதிக்கூடிய அளவை குறைக்கும் மற்றும் சக்தித் துறையில் அதிகளவு நெகிழ்தன்மையை அடையும் நோக்கில், தொழில்நுட்ப, பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக மட்டுப்பாடுகள் தீர்க்கப்படும் என்பதற்கு அமைய, இறக்குமதி செய்யப்படும் வளங்களில் தங்கியிருக்கும் தன்மையை குறைக்கும் வகையில், மூலோபாயங்களை பயன்படுத்தி, சுதேசிய சக்தி வளங்கள் அனுகூல அளவுகளுக்கு அபிவிருத்தி செய்யப்படும்.

3.5.1 நாட்டின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு முதலிய வளங்கள் பற்றி ஆராயப்படும். உள்ளூர் ரீதியாக கிடைக்கக்கூடிய எரிபொருள் மூலத்தை ஹைட்ரஜன் போன்ற எதிர்கால தூய சக்தி மூலங்களுக்கு அபிவிருத்தி செய்வதற்காக, எதிர்கால உயர் பெறுமானத்திற்கும் மற்றும் எதிர்காலத்தில் சாத்தியமான பாவனைக்கும் உரிய கவனத்தை செலுத்தி, வர்த்தக அளவிலான பாவனை உபாய ரீதியாக கட்டமைப்பு செய்யப்படும்.

3.5.2 வர்த்தகவள சாத்தியமுடைய தூரியனைட்டு (thorianite) மற்றும் அது போன்ற ஏனைய அணு சக்தி எரிபொருட்கள் போன்ற சுதேசிய கனிய வளங்கள், சக்தி மாற்றல் தொழில்நுட்பங்கள் கிடைக்கின்ற நேரத்தில், உகந்த காலத்தில் அகழ்ந்து கண்டெடுக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டு, அபிவிருத்தி நிமித்தம் ஆயத்தமாக ஒதுக்கிவைக்கப்படும்.

3.5.3 ஒவ்வொரு வளத்தினதும் தரம், தொழில்நுட்பம், பொருளாதார நிலை ஆகிய அம்சங்களைக் கருத்திற்கொண்டு எட்டப்பட்ட ஒரு முந்துரிமை அடிப்படையில், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பயன்படுத்தப்படும்.

3.5.4 உயிரணுத்திணிவு சக்தி அபிவிருத்திற்கென ஒதுக்கிய பிரதேசங்களில், அர்ப்பணிப்புடைய சக்தி தாவர பெருந்தோட்டங்களை அல்லது உக்கிய தாவர பெருந்தோட்டங்களை சாத்தியமான ஒரு எரிபொருள் வளமாக தாபிப்பதன் மூலம், உயிரணுத்திணிவு சக்தியின் கிடைப்புத் தன்மை மேம்படுத்தப்படும். உயிரணுத்திணிவு சக்தியினதும் மற்றும் உயிரணுத்திணிவு சக்தி மைய எரிபொருள் உற்பத்திகளினதும் வர்த்தகளவில் கிடைக்கும் தன்மை, தொழில் துறை அனல் சக்தி பிரயோகங்களிலுள்ள பயன்பாடு, வீட்டுத் துறையின் பாவனை ஆகியவற்றின் நிமித்தம் ஊக்குவிக்கப்படும். பதனிடப்பட்டிருக்கும் உயிரணுத்திணிவு சக்திக்கு, ஏற்கெனவே காணப்படும் வளங்களைபதனிடுதல், பெறுமதி சேர்த்தல், களஞ்சியப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் மற்றும் உயிரணுத்திணிவு சக்தி விநியோக சங்கிலியை போஷித்தல் ஆகிய வினைத்திறன் வாய்ந்த கூட்டு செயற்பாடுகள்ஊடாக வசதியளிக்கப்படும்.

3.5.5 பாரம்பரிய உயிரணுத்திணிவு சக்தி மைய சமையல் செயற்பாட்டுடன் இணைந்த அசௌகரிகம் நீங்கிய மற்றும் வர்த்தக எரிபொருள் மைய சமையல் உபகரணங்களுக்கு அது போன்ற ஒரு பரிட்சயத்தை தரும் சமையல் அடுப்புகள் போன்ற மேம்படுத்திய உயிரணுத்திணிவு சக்தி மாற்றல் உபகரணங்கள் வீட்டுப் பாவனையின் நிமித்தம் அறிமுகப் படுத்தப்படும். இந்த மூலோபாயம் உயிரணுத்திணிவு சக்தியினது பங்களிப்பை சமையல் பிரயோகங்களுக்காக பயன்படுத்தப்படும் ஒரு எரிபொருளாக தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதற்கும் மற்றும் சௌகரிகத்தின் நிமித்தம் பெற்றோலிய எரிபொருள்களுக்கு நகரும் போக்கை தவிர்ப்பதற்கும் உதவியாக அமையும்.

3.5.6 ஒட்டுமொத்த சக்தி மாற்றல் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் முற்றிலும் போக்குவரத்து எரிபொருளாக திரவநிலை பெற்றோலிய எரிபொருட்களில் தங்கியிருக்கும் தன்மையிலிருந்து விடுபடுவதற்கும், புகையிர மற்றும் வீதி ஆகிய இரண்டு போக்குவரத்து பிரிவுகளிலும் தற்போதிருக்கின்ற போக்குவரத்துக்கான எரிபொருள் எண்ணெய் மைய சக்தியை படிப்படியாக மின்சக்திற்கு மாற்றும் நிமித்தம் அது

ஊக்குவிக்கப்படும். மேலும், மின்சாரத்திற்கு குறைந்த கேள்வி நிலவும் காலங்களுக்கு, மின்சார வாகனங்களை மின்னேற்றுவதிலிருந்து மேலதிக கேள்வியை ஈர்க்கும் பொருட்டு, பொருத்தமான பாவனை கட்டணங்கள் வழங்கப்படும். அவ்வாறு சேர்க்கப்படும் மேலதிக கேள்வி, சூரிய சக்தி, காற்று சக்தி போன்ற சுதேசிய வளங்களின் ஒன்றிணைவை மேம்படுத்தும் நிமித்தம் உபாய ரீதியில் பயன்படுத்தப்படும்.

3.5.7 உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள் இறக்குமதி மீதான வரி அறவீடு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களிலிருந்து வரும் ஒரு அரச கட்டண அறவீடு ஆகியவற்றின் நிமித்தம், நி.ச.அ.ச. சட்டத்தின் ஏற்பாடுகளை மனதில் கொண்டு, நி.ச.அ.ச. மூலம் இயக்கப்படுகின்ற இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்திற்கு கணிசமான நிதிகள் வழங்கப்படும். நிலைபெறு சக்தி, வலு மற்றும் பெற்றோலியத் துறைகளின் தேவைகளை அடையும் வகையில் இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்தின் நோக்கங்கள் விரிவாக்கப்படும்.

3.5.8 அனல் மின்சக்தி பிரயோகங்களுக்கான பாரிய எரிபொருள் விநியோக வளமாக காணப்படுகின்ற இறப்பர் பெருந்தோட்டக் கைத்தொழிலின் பங்களிப்பு உரியவாறு மதிக்கப்பட்டு, இறப்பர் பெருந்தோட்டங்களின் விஸ்தீரணத்தை அதிகரிக்கும் பொருட்டு அத்தகைய தொழில்துறைக்கு பொருத்தமான ஊக்குவிப்பு மானியங்கள் வழங்கப்படும்.

3.6 சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல்

நாட்டின் இயற்கை சுற்றாடல் பாதுகாக்கப்படுவதுடன் மூலோபாயங்களை பயன்படுத்தி, பொருத்தமான குறைந்த புகைவெளியிடும் படிமுறைகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை பின்பற்றி காலநிலை மாற்றங்களை கையாள்வதற்கு அர்த்தமுள்ள பங்களிப்புகள் நல்கப்படும்.

3.6.1 காபனை திண்மமயமாக்கும் தாவரவளர்ப்பு போன்ற இணையான தலையீட்டு நடவடிக்கைளை பின்பற்றி, சக்தி வசதிகளின் சுற்றாடல் தாக்கங்கள் குறைக்கப்படும். ஏற்கனவேயிருக்கின்ற நீர்மின் நீரேந்து பரப்புகளும், எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதியின் நிமித்தம் ஒதுக்கப்படும் காணிகளும் அத்தகைய தாவரங்களை வளர்ப்பதற்கு சாத்தியமான நிலங்களாக கருத்திற்கொள்ளப்படும்.

3.6.2 சக்தித் துறை வசதிகளின் நிர்மாணம் மற்றும் இயக்கச்செயற்பாடு முதலியவற்றின் விளைவாக காலநிலை மாற்றத்தின் பின்னணியில் எழும் சுற்றாடலுக்கான தாக்கங்கள் குறைக்கப்படும்.

3.6.3 தேசிய பொருளாதாரம், நீண்ட கால சுற்றாடல் நன்மைகள் ஆகிய இரண்டின் மீதான தாக்கங்கள்கருத்திற்கொள்ளப்படுகின்ற அதே வேளை, உள்ளூர் மற்றும் பூகோள சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் பொருட்டு,தூய சக்தி மூலங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் என்பவற்றிலிருந்து வருகின்ற சக்தி விநியோகம்ஊக்குவிக்கப்படும்.

3.6.4 சுதேசிய பெற்றோலிய வளங்களும் அணு சக்தி வளங்களும், அத்தகைய வளங்களுக்கான சந்தைக் கேள்வியை ஊக்குவிப்பதன் மூலம், போதிய சுற்றாடல் பாதுகாப்புகளுடன், உகந்தஅளவுக்கு அபிவிருத்தி செய்யப்படும்.

3.6.5 மின்னுற்பத்தியிலிருந்து வருகின்ற உலைச்சாம்பல் மற்றும் கழிவு வெப்பம் ஆகியனவற்றை வர்த்தகப் பெறுமதியுள்ள துணை உற்பத்திகளாக பயன்படுத்தும்முகமாக, தேசிய அளவிலான திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

3.6.6 உடன்பட்டவாறு தேசிய புகை குறைத்தல் தொடர்பான கடப்பாடுகளை நிறைவேற்றும் நிமித்தம்வளிமண்டல பூகோள புகைகளை குறைக்கும் இலக்குகளுக்கு தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs) நல்கப்படும்.

3.6.7 சக்தித் துறையுடன் தொடர்புடைய உள்நாட்டு பின்னணியில் சமூக மற்றும் சுற்றாடல்சார் வெளிக்கள அம்சங்கள் ஆராயப்பட்டு, தீர்மானமெடுத்தல் நடவடிக்கையில் காரணிகளாகக் கொள்ளப்படும்.

3.6.8 காபன் வர்த்தக பொறிமுறைகளின் கீழ் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் பயன்படுத்தப்படுவதோடு, இந்த வாய்ப்புகளை பயன்படுத்தும் பொருட்டு ஒரு சரியான பொறிமுறைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

3.6.9 சக்திக் கருத்திட்டங்களுக்கான கழிவுப்பொருள்கள், அத்தகைய கருத்திட்டங்கள் மாநகர திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு சாத்தியமான பங்களிப்புகளை நல்குவதால், அத்தகைய கழிவுகள் அனுகூலமாக கருதப்படும். தவிர்க்கப்பட்ட மேற்குறித்த மின்சார செலவுக்கு மேலதிகமான ஏதாவது ஒரு செலவு, அபிவிருத்தித் தரப்புகளுக்கு அரசாங்கத்தினால்/உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் நேரடியாக செலுத்தப்படும் என்பதால், சக்தி வசதி நிறுவனங்களுக்கு சுமையை ஏற்படுத்தாது.

3.6.10 சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் (HSE) நியமங்களை அனுசரிக்காமல் சக்தி தொடர்பான ஏதாவது உட்கட்டமைப்பு வசதியை இயக்கும் நபருக்கு எதிராக அதனை ஒரு குற்றமாக கருத, உரிய ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தும் வகையில், சுகாதாரம்-பாதுகாப்பு-சுற்றாடல் தொடர்பில் தேவையான நியமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, உரிய சட்டவிதிகள் ஆக்கப்படும். .

3.7 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் பங்களிப்பை அதிகரித்தல்

உள்ளூர் சமுதாயத்தை சக்திக் தொழில்துறையில் ஈடுபடுத்துவதனூடாக நிலைபெறுதகு தன்மையை அடைவதற்கும் மற்றும் மூலோபாயங்களை பயன்படுத்தி சுற்றாடல் நேய சக்தி வளங்களின் பாவனையை ஊக்குவிப்பதற்கும் ஒரு வழிமுறையாக, அந்நிய செலாவணி சுமையை குறைக்கும் வகையில், நாட்டின் சக்திக் கலவையில், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களிலிருந்து வரும் மின்சார விநியோகம் அதிகரிக்கப்படும்.

3.7.1 ஒரு கேந்திர ரீதியில் ஒருங்கிணைந்த கருத்திட்டங்களின் அங்கீகார படிமுறையினூடாக, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியில் எதிர்நோக்கிய நீண்டகால தாமதங்கள் குறைக்கப்படும்.

3.7.2 செலவுகளை குறைத்தல் மற்றும் முதலீட்டுத் தரப்புகளின் பரந்த பங்குபற்றலுக்கு வசதியளித்தல் ஆகியவற்றுக்கான போட்டித்தன்மை வாய்ந்த திட்டத்தினூடாக, மின்னுற்பத்திற்கான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி சார்ந்த முதலீடுகள் உணர்த்தப்படும்.

3.7.3 மீளப்புதுப்பிக்கத்தகு மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சார உள்ளீர்ப்பை அதிகரிக்கும் பொருட்டு, மின்சார செலுத்துகை உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும்.

3.7.4 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற மின்னுற்பத்திற்கு வசதியளிக்கும் வகையில், ஸ்மார்ட் க்றிட் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மின்சாரப் பகிர்ந்தளிப்பு உட்டகட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

3.7.5 காற்று மற்றும் சூரிய சக்தி போன்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களிலிருந்து மின்சார முறைமைக்கு வரும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உள்ளீர்ப்பின் பாதகமான தாக்கங்களை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

3.7.6 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் உகந்த பாவனையை செயல்படுத்தக் கூடிய வகையில் காற்று, சூரியவொளி, மழைவீழ்ச்சி என்பவற்றுக்கான பயனுள்ள எதிர்கூறும் தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

3.7.7 இடைப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்கள், மின்னழுத்தம், அதிர்வுச்சீராக்கம், வட்டார மின்சாரக் றிட்டிற்கான உதவி, peak shaving மூலமான மின்சுமை மாற்றம் மற்றும் க்றிட் மீள்திறனை மேம்படுத்தல் என்பவற்றை உறுதிசெய்யும் நிமித்தம், சக்திக் களஞ்சியத் தீர்வுகள் ஊக்குவிக்கப்படும்.

3.7.8 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, அரச மற்றும் தனியார் துறை தொழில் முயற்சிகளில் சம்பந்தப்படும் புத்தாக்க நிதியளிப்புத் திட்டங்கள் மற்றும் நிதி உபாயங்கள் என்பன அறிமுகப்படுத்தப்படும்.

3.8 சக்தித் துறையில் நல்லாட்சியை வலுப்படுத்துதல்

நல்லாட்சி சக்தித் துறையின் சகல அம்சங்களிலும், வழிகாட்டும் கோட்பாடாக விளங்க வேண்டும். முதலீட்டுத் தரப்புகளினதும் மற்றும் வாடிக்கையாளர்களினதும் நம்பிக்கையை வென்றெடுக்கும் பொருட்டு, பொறுப்புக்கூறும் தன்மை, நேர்மை, வெளிப்படைத்தன்மை முதலிய அம்சங்களை செயல்படுத்தும்வகையில், சக்தித் துறையிலுள்ள

நல்லாட்சி வலுப்படுத்தப்படும். மூலோபாயங்களை பயன்படுத்தி, சக்தித் துறையில் நல்லாட்சியை உறுதிசெய்வதற்கு பொருத்தமான ஒரு கொள்கைச் சூழலும் மற்றும் ஒழுங்குமுறைச்சட்டகம் தாபிக்கப்பட்டு, மேலும் வலுப்படுத்தப்படும்.

3.8.1 சக்திதுறையிலுள்ள சகல உப துறைகளும் அந்தந்த ஒழுங்குமுறைச்சட்டகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

3.8.2 நீண்டகால தாமதங்களை தவிர்த்து, வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக்கூறும் தன்மையையும் உறுதிசெய்கின்ற நெறிப்படுத்திய போட்டித்தன்மை வாய்ந்த ஒரு கேள்வி மனு திட்டத்தினூடாக பொறித்தொகுதிகள், உபகரணங்கள், மசகெண்ணெய் மற்றும் ஏனைய எரிபொருள் கொள்வனவுகள், மின்சக்திக் கொள்வனவு ஒப்பந்தங்கள் மற்றும் அது போன்ற சலுகைகள் என்பன ஒழுங்குசெய்யப்படும்.

3.8.3 வளர்ந்து வரும் போட்டித்தன்மை வாய்ந்த சூழலிலுள்ள சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்ளும் நிமித்தம் வெளிநாடுகளிலிலுள்ள இணை நிறுவனங்களுக்கும் இலங்கையிலுள்ள அத்தகைய இணை நிறுவனங்களுக்கும் இடையில் ஊழியர் பரிமாற்றல் மற்றும் இடமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிப்பதன் மூலமாக, சக்தித் துறை தொழில்தேர்ச்சியாளர்களின் ஆற்றல் மேம்படுத்தப்படும்.

3.8.4 வினைத்திறனையும், வளங்களின் வெளிப்படையான பாவனையையும், உகந்த பயன்பாட்டையும் அடைந்து கொள்வதற்கான செயற்கை நுண்ணறிவு (ArtificialIntelligence, பொருட்களின்இணையம் (Internet of Things) பரம்பிய பேரேடுகள் முதலியன போன்ற புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை மேலும் அனுமதிக்கின்ற அடையாளப்படுத்தக்கூடிய உபகரணங்கள், ஸ்மார்ட் மாணி வாசிப்புக் கருவி சாதனங்கள் மற்றும் ஸ்மார்ட் மின் பரிமாற்ற கட்டமைப்புகள் என்பவற்றிலிருந்து வரும் மதிப்பு சங்கிலியை விஸ்தரித்து, ஒரு வணிக வளங்கள் திட்டமிடல் தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சக்தித் துறை நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்தும் கருமம் ஒரு முந்துரிமையாகக் கொள்ளப்படும்.

3.8.5 டிஜிட்டல் தகவலின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நிமித்தம் அவற்றை சேமித்தல், பயன்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் ஆகிய அம்சங்களை உள்ளடக்குகின்ற டிஜிட்டல் தகவலின் முகாமைத்துவம் தொடர்பான ஒரு வழிகாட்டல் அறிமுகப்படுத்தப்படும்.

3.8.6 பொதுவசதி சார்ந்த பரிவர்த்தனைகள் டிஜிட்டல்மயப்படுத்தலானது, மேகக் கணிமை (cloud based) மத்திய தரவுத்தளங்களில் தரவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய தரவுகளை சேமித்தல் ஆகியவற்றின் நிமித்தம் பயன்படுத்தப்படும். சக்தித் துறையில் அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் தரவுகள், தகவல்கள் மற்றும் அறிவு என்பன எதிர்கால பாவனையின் நிமித்தம் வகைப்படுத்தி, சுட்டியிடப்பட்டு, பாதுகாப்பாக சேமித்து வைக்கப்படும். இவை அறிவு சார்ந்த சொத்துக்களாக கருதப்படும்.

3.8.7 டிஜிட்டல் மயப்படுத்தலின் மூலம் உருவாக்கப்படும் நிகழ்நேர நுண்ணறிவை பயன்படுத்தி நிறைவேற்றப்படும் பகுப்பாய்வின் மூலம் ஆதாரப்படுத்த முடியுமான ஒரு பொறுப்புக்கூறும் வகையிலும் வெளிப்படைத் தன்மையான சுயாதீன தீர்மானமெடுப்பதற்கான ஒரு உகந்த சூழல் உருவாக்கப்படும்.

3.8.8 இலங்கை சக்தி இருப்புத்தொகை ஆவணத்தின் உரிய கால வெளியீட்டை உறுதிசெய்யும் பொருட்டு, முக்கியமான துறை சார் நிறுவனங்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு தொழிற்படு குழுவினூடாக, சக்தித் துறைக் கொடுக்கல்வாங்கல்கள், நிலையான வருடாந்தத் திட்டத்தின் அடிப்படையில் அந்தந்த நிறுவனங்களினால் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையிற்கு அறிக்கையிடப்படும்.

3.8.9 சக்தித் துறையின் போக்குகள் பற்றி புரிந்துகொள்வதற்கு உதவக்கூடிய சுட்டிகள் இனங்காணப்பட்டு, சான்றுகள் அடிப்படையிலான தீர்மானம் எடுக்கும் நடபடிமுறைக்கு உதவும் வகையில், அவை தேசிய புள்ளிவிபரங்கள் தொகுப்பில் உள்ளடக்கப்படும்.

3.8.10 விழிப்புணர்வை ஏற்படுத்துதல், புகார்களை கையாளுதல் மற்றும் கற்பித்தல், நம்பிக்கை குறைபாட்டை ஒழிப்பதில் இலக்குக்கொள்ளல், சக்தித் துறைக் திட்டங்களை பெருமளவில் ஏற்றல், சக்தி சார்ந்த சேவைகளின் இறுதிப் பாவனையாளரின் உன்னத நடத்தை மற்றும் பாவனையாளரின் பாதுகாப்பு முதலியவற்றுக்கு வழிவகுகின்ற கையடக்கத்தொலைபேசி பிரயோகங்களுடன் இணைந்த இணையத் தளங்களை பயன்படுத்தி, பிரஜைகளின் பயனுறு ஈடுபாடு சக்தித் துறையில் ஊக்குவிக்கப்படும்.

3.9 **எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு காணிகளை பெற்றுக் கொள்ளல்**

குறித்த தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான விஷேட சிறப்பம்சங்களையுடைய காணிகளுக்கான மட்டுப்பாடுகள் மற்றும் கடந்த காலங்களில் மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு ஸ்தலங்களை நகர்த்தியதால் ஏற்பட்ட மேலதிக நிதி சார் இழப்புகள் என்பவற்றை கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் சக்தி சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை தாபிப்பதற்கு தேவையான அமைவிடங்கள் திட்டமிடப்பட்டு ஒதுக்கப்படும். இந்த அமைவிடக் காணிகள் அத்தகைய வசதிகளின் உரிய கால செயற்படுத்துகையை உறுதிசெய்தல் மற்றும் மூலோபாயங்களை பயன்படுத்தி பாதகமான சமூகத் தாக்கங்களை குறைத்தல் ஆகியவற்றின் நிமித்தம் முன்கூட்டி பெற்றுக்கொள்ளப்படும்.

3.9.1 நிலக்கரி, இயற்கை எரிவாயு மற்றும் அணு சக்தி மின்னுற்பத்தி இயந்திர சாதனங்கள், சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் முனையங்கள் என்பன போன்ற எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளை அமைக்க பொருத்தமான ஸ்தலங்கள், பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகளின் பின், உபாய ரீதியில் முன்கூட்டி ஒதுக்கப்படும். இது, பொதுமக்கள் அத்தகைய ஸ்தலங்களை பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்துகொள்ளவும், அபிவிருத்ததிட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது குறைந்தளவு மீளமைவிடத்திற்கும் மற்றும் குறைந்தளவான சமூக தாக்கங்களுக்கும் வழிவகுக்கும்.

3.9.2 காற்று சக்தி மற்றும் சூரிய சக்தி பேட்டைகள் போன்ற பாரியளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கு மிகச்சிறந்த ஸ்தலங்கள் முன்கூட்டி இனங்காணப்பட்டு, ஒரு தலைமை திட்டத்தில் குறிக்கப்படும். ஆதலால், இவற்றை கட்டம் கட்டங்களாக அதிகளவில் செறிந்த வசதிகளாக அபிவிருத்தி செய்ய முடியும்.

3.9.3 தேசிய உட்கட்டமைப்பு வசதிகளின் திட்டமிடலிலுள்ள நன்மைகளை கருத்திற்கொண்டு, பொது மார்க்கங்களுக்கு முந்துரிமை அளித்து, ஆதார மின்சார செலுத்துகை மார்க்கம் மற்றும் குழாய் மார்க்கமாக பெற்றோலியத்தையும் அதே நேரம் எரிவாயுவையும் எடுத்துச்செல்லல் ஆகியவற்றின் நிமித்தம் மார்க்கங்கள் இனங்காணப்படும். அவ்வாறு இனங்காணப்படும் அத்தகைய வசதி மார்க்கங்கள் பொதுமக்களுக்கு முன்கூட்டி தகவல்களை வழங்கும் நோக்கத்திற்காக பிரசுரிக்கப்படும்.

3.9.4 கிடைக்கக்கூடிய அத்தகைய வசதி மார்க்கங்கள் சாத்தியமான போது, பல குழாய் மார்க்கங்களையும் அதே நேரம் மின்சார செலுத்துகை மார்க்கங்களையும் அமைப்பதற்கு பயன்படுத்தப்படும்.

3.9.5 எதிர்கால நிலக்கீழ் மின்சார மார்க்கங்களினதும் மற்றும் குழாய் ரீதியாக எடுத்துச்செல்லும் மார்க்கங்களினதும் அனுகூல அமைவிடம் தொடர்பில் வசதியளிக்கும் பொருட்டு மின்சாரம், நீர், தொடர்பாடல், நகர எரிவாயு மற்றும் பெற்றோலியம் முதலியன அடங்கலாக ஏலவே காணப்படுகின்ற மற்றும் எதிர்கால உட்கட்டமைப்பு வசதிகள் ஒரு கட்டாய பொது புவியியல் தகவல் முறைமையில் (GIS) கிடைக்கச்செய்யப்படும்.

3.9.6 மின்சாரப் பகிர்ந்தளிப்பு, பொது வடிகாலமைப்பு, நீர், தொடர்பாடல் மற்றும் எரிவாயு விநியோகம் என்பன அடங்கலாக வீதியோர பொதுப் பயன்பாட்டு உட்கட்டமைப்பு மார்க்கங்கள், போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைக்கப்படும். தெளிவான உரித்துடமை எல்லை, பராமரிப்பு நெகிழ்தன்மை மற்றும் விரிவாக்கத்திற்கான வாய்ப்பு முதலியன அத்தகைய விதத்தில் உறுதிசெய்யப்படும்.

3.10 **புத்தாக்கத்திற்கும் மற்றும் தொழில்வாண்மைக்கும் வாய்ப்புகளை அளித்தல்**

தொழில்நுட்பம் செறிந்த உள்ளூர் வர்த்தக செயற்பாடுகளை வளர்ப்பதற்கு, இலங்கையின் மட்டுப்பட்டளவான சந்தை வாய்ப்பை கருத்திற்கொண்டு, மூலோபாயங்களை செயல்திறத்துடன் பயன்படுத்தி, உள்ளூர் தொழில்வாண்மையையும் புத்தாக்கத்தையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு, சக்தித் துறையின் பொருத்தமான பரந்த வசதிகள் பயன்படுத்தப்படும்.

3.10.1 மின்சாரம் எதிர்காலத்தின் பிரதான சக்திக் காவியாக அங்கீகரிக்கப்படும், ஆதலால் சக்தி மாற்றல் மற்றும் சக்தி சேமிப்பு உபகரணங்களில் உள்ளூர் வளங்களை பயன்படுத்தும் வகையில், மூலோபாய முயற்சிகள் ஒரு தொழில்மயமாக்கல் உந்துகையாக வளர்த்தெடுக்கப்படும்.

3.10.2 மின்சார முறைமையின் தானியக்கம், தொலைவிலிருந்து இயக்குதல், பரம்பிய நிகழ்நேர நிகழ்வு, தரவுகள் பெறுகை முறைமைகள் மற்றும் ஸ்மார்ட் மாணி வாசிப்புக்கள் ஆகியன தொடர்பான புதிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பிரயோகங்களின் அபிவிருத்தி ஊக்குவிக்கப்படும்.

3.10.3 இலங்கையின் தொழில் முயற்சிகள் சக்தித் துறை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் ஈடுபடும் வகையில் ஊக்குவிக்கப்படும்.

3.10.4 புதிய மற்றும் வளர்ந்து வரும் மீளப்புதுப்பிக்கத்தகு எரிபொருள் சக்தி மூலங்களை அறிமுகப்படுத்துதல், பயன்படுத்துதல் அத்தகைய சக்தி மூலங்கள் தொடர்பான திட்டங்களை செயற்படுத்துதல், செயல்திறன் மிக்க சக்தி மாற்றல் தொழில் நுட்பங்கள் மற்றும் இறுதிப் பாவனை சார் தொழில்நுட்பங்கள் என்பன பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகள் ஊக்குவிக்கப்படும்.

3.10.5 புலமைச்சொத்துக்களை காப்பாற்றுதல், அத்தகைய புலமைச்சொத்தை வர்த்தகமயமாக்கும் வரை பாதுகாத்தல் மற்றும் நிதி சார்ந்த ஊக்குவிப்புகள் மற்றும் வரி நன்மைகள் என்பவற்றினூடாக, வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற நவீன தொழில்நுட்பங்களை போஷித்து வளர்த்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலமாக, புத்தாக்கத்திற்கு வசதி அளிக்கப்படும்.

3.10.6 சக்தித் துறை அபிவிருத்திற்கு தேவையான சுதேசிய அறிவும் மற்றும் ஆற்றல்களும் செயலுருவாக்கப்படும்.

3.10.7 வாகன சக்தி சேமிப்பு முறைமைகளினால் வழங்கப்படும் (ESS) ஆற்றல், ஒரு தானியக்க கேள்வி பதிலீட்டு (ADR) தெரிவாகவும் மற்றும் ஒரு மின் பளு விபரக் குறிப்பு முகாமை சாதனமாகவும் பயன்படுத்தி, சக்தியை சேமித்து அவசரநிலையில் உடனடியாக சக்தியை வழங்கக்கூடிய ஒரு உபகரணமாகவும் கருத்திற்கொண்டு, அது பற்றி ஆய்வு செய்யப்படும்.

3.10.8 உள்நாட்டு பெறுமதி சேர்த்தல் வாய்ப்புடைய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியை பயன்படுத்துகின்ற ஒன்-க்றிட் மூலமாக பகிர்ந்தளிக்கப்படும் சிறியளவான சக்தியின் பிரயோகங்களும் மற்றும் ஒப்-க்றிட்டிலேயே தங்கியிருக்கும் சக்தியின் பிரயோகங்களும் பொருளாதார அபிவிருத்தி உந்துகையாக ஊக்குவிக்கப்படும்.

4. முடிவுகள் விநியோக சட்டகம்

இந்த அத்தியாயம் எதிர்பார்க்கப்பட்ட கொள்கை நோக்கங்கள் மற்றும் கொள்கை நோக்கங்களை செயற்படுத்தும் பொறுப்புக்களை சாட்டுதல் முதலிய அம்சங்களுடன் இணைந்த இலக்குகளையும், அதே போன்று சாத்தியமான கால வரையறைகளையும் விவரிக்கின்றது. அவை இரண்டு வருட கால இடைவெளியில் மீளாய்வு செய்யப்பட்டு, எதிர்வரும் காலங்களின் நிமித்தம் மீளெடுத்துரைக்கப்படவுள்ளன.

4.1 சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்தல் — பொறுப்புக் கூறல்.

சக்திப் பாதுகாப்பை செயற்படுத்துவதற்காக இனங்காணப்படும் மூலோபாயங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு, பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள உரிய நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் மற்றும் மைல்கற்களும் அடையப்படுதல் வேண்டும்.

1a பிராந்திய நாடுகளுடனான மின்சார பரிமாற்றல் தொடர்பான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 2021 ஆம் ஆண்டிறுதியளவில் அதன் முடிவுகள் ஆவணப் படுத்தப்படும். — MoPE

1b உகந்த கொள்திறனை நிர்ணயிப்பதற்கான ஒரு ஆய்வை மேற்கொண்டு, சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்கல் திட்டத்தின் சாத்தியவள மதிப்பீடு 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் மேற்கொள்ளப்படும். ஒரு துணை சுத்திகரிப்பு வசதியை தாபிப்பது தொடர்பான ஒரு பூர்வாங்க ஆய்வு 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும். — இ.பெ.கூ.

1c பெற்றோலிய உப துறையிலுள்ள ஒவ்வொரு தரப்பும் மற்றும் க்றிட் மின்சார முறைமையுடன் இணைந்துள்ள அனல் மின்னுற்பத்தி இயந்திர சாதனங்களை இயக்கும் ஒவ்வொரு தரப்பும் கூட்டாக இணைந்து குறித்த ஏதாவது ஒரு காலப்பகுதியில் ஆகக்குறைந்தது 30 நாட்களுக்கு தேவையான ஒரு மூலோபாய எரிபொருள் ஒதுக்கத்தை பேணும். இரண்டிலொரு ஒரு தரப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்படவுள்ள உள்நாட்டு களஞ்சிய கொள்திறனுக்கான இலக்குகள் மீது உடன்படுவது பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினதும் மற்றும் இலங்கை மின்சார — இ.பெ.கூ./ இ.மி.ச.

சபையினதும் (இ.மி.ச.) கூட்டிணைந்த பொறுப்பாகும். சகல எதிர்கால மின்னுற்பத்தி இயந்திரங்களின் தகவு திறன்களில் உள்ளூர் ரீதியாக பேணப்பட வேண்டிய பொருத்தமான களஞ்சிய கொள்திறன் அளவுகள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

மி.ச.அ. 1d சக்தித் துறையின் செயல்திறனை கடுமையாக பாதிக்கக்கூடிய சாத்தியமான உள்ளக மற்றும் வெளிக்கள இடைநேர் நிகழ் காரணிகளை மதிப்பிடும் பொருட்டு முக்கியமான துறைகளின் போதிய பிரதிநிதிகளை உள்ளடக்கி "சக்தித் துறை இடர்மதிப்பீட்டுக் குழு" என பெயரிடப்படவுள்ள ஒரு உயர் மட்ட நிலையியல் குழு 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் தாபிக்கப்படும். இடர் முகாமைத்துவ விடயத்தில் நிபுணத்துவம் வாய்ந்த இசைந்து தெரிவு செய்யப்பட்ட நிபுணர்கள் இந்தக் குழு உறுப்பினர்களில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களுக்கு இடர்களை எவ்வாறு இனங்காணுவது என்பது தொடர்பில் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். இந்தக் குழு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூடி, நிகழ்தகவு தாக்கப் பகுப்பாய்வின் அடிப்படையில் அத்தகைய இடைநேர் காரணிகளை இனங்கண்டு, அவற்றின் தாக்கங்களை குறைப்பதற்கான திட்டங்களை தயாரிக்குமாறு துறை சார்ந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். இந்தக் குழுவை நிமியத்து, கூட்டச்செய்யும் பொறுப்பு மின்சார விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

நி. ச.அ.ச./ பெ.வ. அ.செ. 1e மீளப்புதுப்பிக்கத்தகு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகாத இரண்டு வகையான சுதேசிய சக்தி வளங்களினதும் ஒரு பொருட்பதிவேடு நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (நி. ச.அ.ச.) மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (பெ.வ.அ.செ.) ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டு, 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் பிரசுரிக்கப்படும். காற்று-வெளி புவிஈர்ப்பு/ காந்தபுலதரவுகள் பெறப்பட்டு, 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் படிமுறைப்படுத்தப்படும். மன்னார் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலும் மற்றும் காவேரி வடிநிலங்களிலும் 2D/3D நில அதிர்வுத் தரவுகளை சேகரிக்கும் பணி 2022 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்யப்படும்.

பொறுப்புக் கூறல். **4.2 சக்தி சார்ந்த சேவைகளுக்கான வாய்ப்பை வழங்குதல்**

சகல பிரஜைகளும் அவர்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்திக்கொள்வதற்கும் மற்றும் பயனுள்ள பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் நம்பத்தகுந்த, பொருத்தமான, மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய, சமத்துவமான மற்றும் தரமான சக்தி சார்ந்த சேவைகளுக்கான பிரவேச வசதி உறுதிசெய்யப்படும். பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் படிநிலைகளும் அடையப்படுதல் வேண்டும்.

இ.மி.ச./லெகோ 2a எதிர்கால சாத்தியமான சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களையும் வியாபார செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் நிமித்தம், வியாபார செயற்பாடுகளின் மூலதன செலவுகளுடன் ஒப்பிடும்போது, தற்சமயம் கணிசமான அளவில் இருக்கக்கூடிய ஒரு மின்சார இணைப்பை பெறுவதற்கான ஆரம்பச் செலவு, 100KVA வரையான மின்சார ஒப்பந்தக் கேள்விகளுக்கான மின்மாற்றியின் முழு செலவும் விலக்களிக்கப்படும் ஒரு விஷேட சலுகைப் பொதியின் கீழ் குறைக்கப்பட்டு, அத்தகைய செலவு மின்சாரப் பகிர்ந்தளிப்பு கட்டணங்களினூடாக சமூகமயப்படுத்தப்படும். இந்தத் திட்டம் ஊடகத்தினூடாக பரந்த பொருத்தமான பிரசார விளம்பரத்துடன் இ.மி.ச./ லெகோ மூலம் 2012 சனவரி மாதத்திலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

இ.மி.ச./லெகோ 2b மின்சாரப் பகிர்ந்தளிப்பு நிறுவனங்களின் மூலம் உட்கட்டமைப்பு செலவை அறவிடுவதற்கு ஒரு புதிய மின்சார இணைப்பை வழங்குவதிலுள்ள ஆரம்ப செலவு, சகல நுகர்வோர் வகையினர்க்கும் 2022 ஆம் ஆண்டு இறுதியளவில் கட்டம் கட்டமாக நிறுத்தப்படும். அத்தகைய செலவுகள், "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" எனும் சுட்டியில் நாட்டின் நிலையை 50 என்ற அளவுக்கு கீழ் குறையும் வகையில் மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கட்டணங்களினூடாக சமூகமயப்படுத்தப்படும்.

2c வீட்டுப் பாவனையாளர்களுக்கும் மற்றும் ஏனைய சில்லறை வாடிக்கையாளர்களுக்கும் விருப்பமுறை சார்ந்த "ஒரே நாள்" மின்சார சேவை இணைப்புகள் 2020 நடுப்பகுதியளவில் வருங்கால எந்த வாடிக்கையாளருக்கும் ஒரு தொகை கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்படும். அதே போன்று, ஏனைய செலவு அறவீட்டு சேவைகள் வசதியும், துரிதமாக மின்சார சேவை தேவைப்படும் வாடிக்கையாளர்களுக்கு, ஒரு தொகை கொடுப்பனவில் பெற்றுக்கொடுக்கப்படும். வழமையான மின்சார சேவைக்கான கால வரையறை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இ.பொ.ப.ஆ), குறிப்பீடுசெய்யும் வர்த்தகத் தரம் தொடர்பான விதிக்கோவைக்கு உட்படுத்தப்படும். இ.மி.ச./லெகோ

2d உயிரணுத்திணிவு சக்தியினதும் மற்றும் உயிரணுத்திணிவு சக்தி மைய எரிபொருட்களினதும் வர்த்தக அளவிலான விநியோகம், நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (நி.ச.அ.ச.) இன் ஒரு முன்னெடுப்பாக, 2020-2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள், 20,000 ஹெக்டேயர் அளவான உயிரணுத் திணிவு சக்தி தாவர பெருந்தோட்டங்களை தாபிப்பதனூடாக, தொழில்சார் அனல் சக்தி பிரயோகங்களில், பாவனையின் நிமித்தம் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் டொன் என்ற அளவை அடையும் வகையில் இரட்டிப்பாக்கப்படும். குறித்த பயன்வாய்ந்த உயிரணுத் திணிவு சக்தி தாவரப் பெருந்தோட்டங்கள் மற்றும் ஏனைய வர்த்தக அளவிலான அத்தகைய தாவரப் பெருந்தோட்டங்கள் அடங்கலாக எரி விறகுகளை விநியோகிக்கும் வர்த்தக செயற்பாடுகளுக்கு அரச காணிகள், நுண் நிதி உதவி மற்றும் ஏனைய நிதி சார்ந்த ஊக்குவிப்புக்கள் என்பன பெற்றுக்கொடுக்கப்படும். நி.ச.அ.ச.

2e வர்த்தகளவில் மேம்பட்ட, பொருத்தமான, உயிரணுத்திணிவு சக்தி எரிபொருள் உற்பத்திகளையும் மற்றும் வீட்டுப் பாவனைக்கான தொழில்நுட்ப மாற்றலையும் ஊக்குவிக்கும் நிமித்தம், அத்தகைய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களின் (உ-ம்: மேம்பட்ட சமையல் அடுப்புகள் மற்றும் சிறிய எரிவாயுயாக்கிகள்) உற்பத்தியிலும் மற்றும் பகிர்ந்தளிப்பிலும் ஈடுபடுகின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் நிதி ஊக்குவிப்புகள் வழங்கப்படுகின்றனவா என்பது பற்றி நி. ச.அ.ச. மூலம் உறுதிசெய்யப்படும். வர்த்தகமயமான உயிரணுத்திணிவு சக்தி எரிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற மேம்பட்ட சமையல் அடுப்புகளின் குறைந்தபட்சம் 5% வீதமாவது 2021 ஆம் ஆண்டளவில் நி.ச.அ.ச. மூலம் உறுதிசெய்யப்படும். நி.ச.அ.ச.

2f பெற்றோலிய நிறுவனங்களினால் விநியோகிக்கப்படும் எரிபொருட்களின் விநியோகத் தர நியமங்கள் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் ஒரு தன்னார்வ அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டு இறுதியளவில் கட்டாய அடிப்படையில் இ.பொ.ப.ஆ. மூலம் நடைமுறைப்படுத்தப்படும். தர ரீதியான பரிசீலனை அறிக்கைகள் வெளியிடப்படும். இ.பொ.ப.ஆ.

2g நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் சக்தி சார்ந்த சேவைகளின் விநியோகமும் மற்றும் சேவையின் தர நியமங்களும் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் தன்னார்வ அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டு இறுதியளவில் இ.பொ.ப.ஆ. மூலம் கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். இ.பொ.ப.ஆ.

2h சகல குறைந்த மின் அழுத்த மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்புகளுக்கும் முற்றாக காப்பிட்டு திரட்டிய வான்வெளி கடத்திகள் (all-insulated ABC) பயன்படுத்தப்படும். நகர பிரதேசங்களுக்கு வெளியாலுள்ள குறை மின்அழுத்த உயரமான மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்புகள் 2025 ஆம் ஆண்டளவில் முற்றாக காப்பிட்டு திரட்டிய வான்வெளி கடத்திகள் (all-insulated ABC) களுக்கு முழுமையாக மாற்றப்படும். நகர பிரதேசங்களிலுள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்புகள் 2030 ஆம் ஆண்டளவில் ஒரு நிலக்கீழ் மின்சார வலையமைப்புக்கு மாற்றப்படும். இ.மி.ச./லெகோ

இ.மி.ச./லெகோ

2 i பொதுவசதிகளின் முழுமையான பெறுமான சங்கிலியை உள்ளடக்குகின்ற ஒரு தொழில்நுட்ப மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும். முக்கியமான உபகரணங்களின் தகவுதிறன்கள், நிலை மற்றும் நியமங்கள் என்பன பதியப்பட்டு, 2020 ஆம் ஆண்டினுள் ஒரு நியமப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் இ.மி.ச. மற்றும் லெகோ ஆகியவற்றினால் ஆரம்பிக்கப்படும்.

இ.பெ.கூ./
பெ.வ.அ.செ.

2 j அடர்த்தியான வதிவிட மற்றும் தொழில் கொத்தணிகளுக்கு திரவநிலை எரிவாயுவையும் எரிபொருட்களையும் வழங்கும் நிமித்தம் புதிய குழாய்மார்க்க எடுத்துச்செல்லல் முறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் அத்தகைய வசதிகளை விரிவாக்கல் தொடர்பான சாத்தியவள ஆய்வு 2021 ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்படும்.

இ.மி.ச./லெகோ

2 k நாட்டிற்கு பெறுமதி அளிக்கக்கூடிய ஸ்மார்ட் க்றிட் மற்றும் ஸ்மார்ட் மின் மாணி வாசிப்புத் தொழில்நுட்பங்களை இனங்காணும் நிமித்தம், மின்சார பகிர்ந்தளிப்புக்கு அனுமதிப்பத்திரம் பெற்ற ஐந்து தரப்புகளை உள்ளடக்கி, ஐந்து முன்னோடிக் திட்டங்கள் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் இ.மி.ச. மற்றும் லெகோ ஆகியவற்றின் மூலம் ஆரம்பிக்கப்படும்.

இ.மி.ச./லெகோ

2 l எந்த ஒரு வாடிக்கையாளருக்கும், தேவையின் அடிப்படையில் ஸ்மார்ட் மின் மாணி வாசிப்பு கருவிகளும் முன்கூட்டி கட்டணம் செலுத்தப்பட்ட மின் மாணி வாசிப்பு கருவிகளும் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் பெற்றுக்கொடுக்கப்படும்.

இ.மி.ச./லெகோ

2 m கொடுப்பனவுகள் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தல் அடங்கலாக இ.மி.ச. மற்றும் லெகோ ஆகியவற்றினால் வழங்கப்படும் சகல தரமான சேவைகளில் ஆகக்குறைந்தது 50% வீதமான சேவைகள் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் தொலைபேசி மற்றும் இன்டர்நெட் வசதிகளினூடாகவும் தெரிவு ரீதியில் கிடைக்கச்செய்யப்படும். ஆகையால், அத்தகைய சேவைகளை தொடரும் பொருட்டு வாடிக்கையாளர், வசதி அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் கிடையாது. 2021 ஆம் ஆண்டு இறுதியளவில், சகல தரமான சேவைகளும் தொலைபேசி மற்றும் இன்டர்நெட்டு வசதிகள் வாயிலாக தெரிவு ரீதியில் பெற்றுக்கொடுக்கப்படும்.

பொறுப்புக் கூறல்

4.3 சக்தி சார்ந்த விநியோக சேவைகளை தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் வழங்குதல்

சக்தி சார்ந்த சேவைகள் தேசிய பொருளாதாரத்தின் மீதுள்ள சுமைகளை குறைக்கும் வகையில் உகந்த நீண்டகால செலவில் வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்ய, பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் மைல்கற்களும் அடையப்படுதல் வேண்டும்.

இ.மி.ச./
இ.பெ.கூ./
இ.பொ.ப.ஆ.

3a மின்சாரம் மற்றும் உயிர்ச்சுவட்டு எரிபொருள் உற்பத்திகள் என்பவற்றுக்கான வெளிப்படைத்தன்மை வாய்ந்த விலை நிர்ணய முறையியல் இ.பொ.ப.ஆ. தாபிக்கும் ஒரு கட்டுப்பாட்டு பொறிமுறையினூடாக இ.மி.ச., இ.பெ.கூ. மற்றும் ஏனைய துறை சார்ந்த தரப்புகள் என்பவற்றின் மூலம் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும்.

மி.ச.அ.

3b வாழ்வாதார மின்சாரக் கட்டணம் மாதமொன்றுக்கு 30 kWh மின்சாரத்திற்கு குறைந்த மின்சாரத்தை நுகரும் வீட்டு வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும். மானிய தொகைக்கும் நிதி மூலத்திற்கும் விஷேட கருசனையை தேவைப்படுத்தும் ஏனைய சக்திப் பாவனையாளர் குழுக்களை நிர்ணயிக்கும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் மி.வ.ச.அ. மூலம் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

3c திரவநிலை வாயு மற்றும் எரிவாயு மைய எரிபொருட்கள் ஆகிய இரண்டும் அடங்கலாக, 2019 ஆம் ஆண்டிறுதியளவில், ஒரு குறுகிய மற்றும் நடுத்தரகால திட்டமிடல் பொறிமுறையும், ஒரு தொடர் திட்டமிடல் நடைமுறையும் பெற்றோலிய துறையின் நிமித்தம் தாபிக்கப்படும். முதலாவது திட்டம் 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ளது. பெ.வ.அ.அ.

4.4 சக்தி வினைத்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல் பொறுப்புக் கூறல்

சக்தியின் வினைத்திறன் பாவனையையும் பாதுகாப்பையும் உறுதிசெய்கின்ற அதே வேளையில், சக்தி முறைமைகள் வினைத்திறன் வாய்ந்ததாக முகாமை செய்யப்பட்டு இயக்கப்படும். பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் மைல்கற்களும் அடையப்படுதல் வேண்டும்.

4a 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இறுதிப் பாவனையாளர் செயற்பாடுகளிலான குறித்த சக்திப் பாவனை 2023 ஆம் ஆண்டளவில் 1,243 GWh மின்சாரத்தை சேமிக்கக்கூடிய, தேசிய சக்தி வினைத்திறன் மேம்பாட்டு சக்தி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக, 2023 ஆம் ஆண்டளவில் 10% வீதத்தால் குறைக்கப்படும். நி. ச.அ.ச.

4b LED மின்குமிழ்களுக்கான குறைந்தபட்ச சக்தி செயல்திறன் நியமங்களும் மற்றும் குளிரூட்டிகள், தனியாள் பாவனை கணினிகள், குளிர்சாதன பெட்டிகள், கூரை மின்விசிறிகள், நீளமான ஒளிரும் மின் விளக்குகள்/ சீராக்கும் தடைச் சாதனங்கள், மற்றும் தூண்டும் மோட்டார்கள் ஆகியவற்றுக்கான சக்தி முத்திரையிடல் திட்டமும் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும். நி. ச.அ.ச.

4c குறைந்தளவு புகையை வெளியிடும் குறைந்தளவு புகைக்கரியுடைய உயிரணுத்திணிவு சமையல் அடுப்புகளின் பாவனை 2022 ஆம் ஆண்டளவில் 10% வீதமான வீடுகளுக்கு அதிகரிக்கப்படும். செயன்முறைப்படுத்தப்பட்டு வர்த்தகமயப்படுத்திய அத்தகைய சமையல் அடுப்புகளில் பயன்படுத்தப்படும் உயிரணுத்திணிவு சக்தி மைய எரிபொருட்கள் இயலுமான ஒரு சூழலை உருவாக்குவதன் மூலம், சில்லறை சந்தை முழுதிலும் பரந்தளவில் கிடைக்கச் செய்யப்படும். நி. ச.அ.ச.

4d "சக்தி முகாமையாளர்" திட்டம் குறித்துரைக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு, 2019 ஆம் ஆண்டு இறுதியில் கட்டாய அடிப்படையில் செயற்படுத்தப்படும். அந்தத் திட்டம் ஏனைய நிறுவனம் சார் பாவனையாளர்களுக்கும், 2020 ஆம் ஆண்டளவில் செயற்படுத்தப்படும். நி. ச.அ.ச.

4e ஏற்கெனவேயிருக்கின்ற கட்டிடங்களின் சக்தி வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டு, துரிதமான ஒரு தேய்மான திட்டத்தின் மூலம் ஆதாரப்படுத்தப்படும் வினைத்திறன் வாய்ந்த உபகரணங்களின் குறைந்தளவான வரியும் மற்றும் வரி விதிப்பும் 2020ஆம் ஆண்டளவில் கட்டிட புனர்நிர்மாணத்திற்கும் மற்றும் ஆதார நிர்மாண துறைக்கும் பெற்றுக்கொடுக்கப்படும். நி.ச.அ.ச.

4f வர்த்தகக் கட்டிடங்களுக்கான தனிப்பட்ட ஒரு வரி விதிப்பு திட்டம், 2020 ஆம் ஆண்டு இறுதியளவில், எளிதாக்கப்பட்ட ஒரு சக்திப் பயன்பாட்டு சுட்டியின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படும். வினைத்திறன் வாய்ந்த தொழில்நுட்பங்கள் தொடர்பில் சந்தைக்கு ஆதரவளிப்பதற்கான அதையொத்த ஒரு திட்டம் அரச துறை தலைமை வகிக்கும் ஒரு பசுமைக் கொள்முதல் நடபடிமுறையினூடாக 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிமுகப் படுத்தப்படும். நி.ச.அ.ச.

இ.மி.ச.	4g	துணை மின்சார முறைமைகளின் வினைத்திறனையும் மற்றும் மின்பிறப்பாக்கி வினைத்திறன்களையும் மதிப்பிடுவதற்கான ஒரு சக்தி மதிப்பாய்வினூடாக சக்தி உற்பத்தி வசதிகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். ஒரு துறை ரீதியான சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2020ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும்.
மி.ச.அ.	4h	கிராமிய, நகர மற்றும் பெரு வீதிகளுக்கும் மற்றும் ஏனைய பொது இடங்களின் ஒளியேற்றல் தேவைகளுக்கும் வசதியளிப்பதற்கான வீதி ஒளியேற்றல் தொடர்பான ஒரு ஒளியேற்றல் நியம முறை 2020 ஆம் ஆண்டினுள்அறிமுகப்படுத்தப்பட்டு அது கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
லெகோ	4i	தானியக்க ரீதியில் இயங்கும் கேள்விக்கான ஒரு முன்னோடிப் பதிலீட்டுத்திட்டம் 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் செயற்படுத்தப்படும். குறித்த தலையீட்டு நடவடிக்கையினது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியான வாய்ப்புடைமை விரிவாக்கும் நிமித்தம் ஆவணப்படுத்தப்படும்.
இ.மி.ச./ லெகோ	4j	மின்சாரக்ரிட்டில் நிகழும் ஒட்டுமொத்த மின்சார முறைமை இழப்புகள் 2020 ஆம் ஆண்டளவில் மின்னுற்பத்தியின் 7.5% வீதத்திற்கு குறைக்கப்படும்.
இ.மி.ச./ லெகோ	4k	ஒரு பொருத்தமான கனபெறுமான அடிப்படையிலான கட்டணத்தினூடாக, இறுதிப் பாவனையாளர்களின் மூலமான எதிர்வினை மின்திறனுக்கான கேள்வியை ஊக்கம் குன்றச் செய்வதற்கான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலமாக, எதிர்வினை சக்தி முகாமைத்துவம் மேலும் தீவிரப்படுத்தப்படும்.
போ.சி.வி.சே.அ.	4l	போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் நாட்டிலுள்ள பிரதான நகரங்களுக்கான தவிர்த்தல், நகர்த்தல் மற்றும் மேம்படுத்துதல் முதலிய உத்திகள், புத்திசாதுர்யமான பல மாதிரி போக்குவரத்து ஒழுங்குமுறை சார்ந்த தீர்வுகள் என்பன பின்பற்றப்படுவதன் மூலம், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டளவில் வகைதுறை சார்ந்த மக்கள் போக்குவரத்து மாதிரிப் பங்கு 10% வீதத்தால் அதிகரிக்கப்படும்.
MoPA & M	4 m	சகல நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினதும் மற்றும் பிராந்திய தலைமை அலுவலகங்களினதும் ஆகக்குறைந்தது 30% வீதமானவைக்கு 2021 ஆம் ஆண்டளவில், தொலைவிலிருந்து கூட்டங்களை நடத்தக்கூடிய தொலைத்தொடர்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படும். சகல முக்கிய அரச காரியாலயங்கள் 2020 ஆம் ஆண்டளவில் கூட்டங்களை நடத்தக்கூடிய அத்தகைய தொலைத்தொடர்பு வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். கூட்டங்களுக்கு சமுகமளிக்கும் பொருட்டு ஒரு மணித்தியாலத்திற்கும் அதிக காலம் பயணிக்கவேண்டிய பங்குபற்றும் அலுவலர்கள், தொலைத்தொடர்பு வசதிகளினூடாக கூட்டங்களில் பங்குபற்றும் வகையில் ஊக்கப்படுத்தப்படவும் 2019 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து சகல அமைச்சுகளிலும் கூட்டங்களை நடத்தக்கூடிய தொலைத்தொடர்பு வசதிகள் தாபிக்கப்படவும் வேண்டும்.
மி.ச.அ.	4n	போக்குவரத்துத் துறையில் சக்திப் பாவனையை குறைக்கும் பொருட்டு, பௌதீக ரீதியான பிரசன்னத்தை தேவைப்படுத்தாத அரசாங்க முகவர் நிலையங்களில் வழங்கப்படும் வழமையான சகல சேவைகளும் 2020 ஆம் ஆண்டிலிருந்து இன்டர்நெட் அல்லது தொலைபேசி வசதிகளினூடாக கிடைக்கச் செய்யப்படும்.
நி.ச.அ.ச.	4o	வர்த்தகக் கட்டிடங்களுக்கு ஒரு செயல்திறன் அடிப்படையிலான சக்தி வினைத்திறன் கட்டிட விதிக்கோவை 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் கட்டாயமாக்கப்படும். குடியிருப்புத் துறைக்கான ஒரு விருப்பத் தேர்வுத் திட்டம் 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிமுகப்படுத்தப்படும்.

4p ஸ்மார்ட் க்றிட் மைய தானியக்க பதிலீட்டு முறையில் சக்தி முகாமைத்துவத்திலும் எதிர்கால வாய்ப்புகளிலும் கவனம் செலுத்தும் கட்டிட முகாமைத்துவ முறைமைகளின் இணைப்பு 2020 ஆம் ஆண்டளவில் நகர அபிவிருத்தி அதிகார சபை (ந.அ.அ.ச.) மூலம் சகல வர்த்தக அபிவிருத்திகளுக்கும் ஒரு கட்டாய திட்டமிடல் தகவுதிறனாக ஆக்கப்படும். மா.மே.மா. அ. அ., வீ.அ.அ.ச.

4.5 **தற்சார்பை மேம்படுத்துதல்** பொறுப்புக் கூறல்

இறக்குமதி சக்தி வளங்களில் தங்கியிருக்கின்ற தன்மையைக் குறைக்கும் பொருட்டும், சக்தி துறையில் உயர்வான மீள்திறத்தை அடையவும், சுதேசிய சக்தி வளங்கள் உகந்தஅளவுக்கு அபிவிருத்தி செய்யப்படும். பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவகங்களினால் பின்வரும் இலக்குகளும் மற்றும் மைல்கற்களும் அடையப்படும்.

5a போக்குவரத்துத் துறையிலும் மற்றும் ஏனைய துறைகளிலும் இயற்கை எரிவாயு/ மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மைய ஹைட்ரஜன் மற்றும் GTL ஆகியவற்றின் பாவனை பற்றிய சாத்தியவள ஆய்வுகள் 2022 ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்படும். நி.ச.அ.ச./ பெ.வ.அ.செ.

5b பொருளாதாரப் பெறுமானம், தொழில்நுட்பம் மற்றும் வளங்களின் தரம் என்பவற்றை கருத்திற்கொண்டு, எட்டப்பட்ட ஒரு முந்துரிமை ஒழுங்கின் அடிப்படையில், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பயன்படுத்தப்படும். காற்று சக்தி, நீர்வலுவுக்கு அடுத்ததாக மிகவும் நம்பிக்கையூட்டுகிற மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளமாக இனங்காணப்படுகிறது. அந்தந்த அரச மற்றும் தனியார் தரப்புகளுடன் இணைந்து, பாரிய நீர்வலு தவிர, நி. ச.அ.ச. மூலம் 2022 ஆம் ஆண்டளவில், மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் ஆகக்குறைந்தது 20% பங்களிப்பை பெறும் நிமித்தம் காற்று சக்தியை அபிவிருத்தி செய்வதற்கு அதிக முந்துரிமை அளிக்கப்படும். நி.ச.அ.ச.

5c பயிரிடப்படாத ஆகக்குறைந்தது 10,000 ஹெக்டேயர் தரிசு நிலக் காணிகள் உயிரணுத்திணிவு சக்தி அபிவிருத்தி பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, வர்த்தக அளவில் மரம் மற்றும் எரிவிறகு தாவர தோட்டங்களாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து 5 வருட காலப்பகுதியிற்கு அபிவிருத்தி தரப்புகளுக்கு நி. ச.அ.ச. மூலம் குத்தகைக்கு விடப்படும். நி.ச.அ.ச.

5d ஐந்து பிராந்தியங்களிலுள்ள உயிரணுத்திணிவு சக்தி விநியோக சங்கிலிகள் வர்த்தகமயப்படும் வரை, அத்தகைய விநியோக சங்கிலிகள் மூன்று ஆண்டு காலப்பகுதிற்கு, நி.ச.அ.ச. மூலம் 2020 ஆம் ஆண்டளவில், ஒரு முன்னோடி திட்டத்தினூடாக, மேம்பட்ட உயிரணுத்திணிவு சக்தி மீதிகள் சேகரிப்பு, கலப்பு பயிர்ச் செய்கை மற்றும் நிலையான பிரித்தெடுத்தல் சான்றிதழ் என்பவற்றினால் ஆதரிக்கப்படும். நி.ச.அ.ச.

5e கொழும்பு மற்றும் விமானநிலையம், அவிஸ்ஸாவெல, நீர்கொழும்பு மற்றும் வேயாங்கொட ஆகிய இடங்களுக்கு இடையில் மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற புறநகர் புகையிரதப் பாதைகள் 2023 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் மேம்படுத்தப்பட்டு மின்சாரமயமாக்கப்படும். மாகாண நகர சுற்றுப்புறங்களிலுள்ள பயனுள்ள ஏனைய புகையிரத வீதிகள் 2025 ஆம் ஆண்டளவில் மேம்படுத்தப்பட்டு மின்சாரமயமாக்கப்படும். போ.சி.வி.சே.அ.

5f சகல புதிய இலகு வாகனங்களினது பதிவுகளில் ஆகக்குறைந்தது 20% மின்சார வாகனங்களாக 2022 ஆம் ஆண்டளவில் இருக்கவேண்டும். மின்சார வாகனங்களுக்கு துரிதமாக மின்னேற்றக்கூடிய DC ஆற்றல் வாய்ந்த ஆகக்குறைந்தது 25 புதிய மின்னேற்றும் பொது நிலையங்கள், திட்டமிடப்பட்ட இடங்களில் 2020 ஆம் ஆண்டளவில் இ.மி.ச./லெகோ மூலம் அமைக்கப்படும். குறித்த கைத்தொழிலுக்கு நிதி ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலமாக, இ.மி.ச./ லெகோ முயற்சிகளுக்கு உதவும் வகையில், தமது சொந்த மின்னேற்றும் நிலையங்களை அமைக்கும் பொருட்டு, நி.ச.அ.ச. மூலம் தனியார் துறையிலுள்ள தரப்புகள் ஊக்குவிக்கப்படும். இ.மி.ச./ லெகோ/ நி.ச.அ.ச

பொறுப்புக் கூறல்

4.6 சுற்றாடலை பேணுதல்

இலங்கையின் சக்தித் துறையில் குறைந்தளவான காபன் அடர்த்தியை பேணுவதன் மூலமாக, காலநிலை மாற்றத்திற்கு அர்த்தமுள்ள ஒரு பங்களிப்பு நல்கப்படும். பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் மற்றும் மைல் கற்களும் அடையப்படுவதன் மூலம், உலகளாவிய மற்றும் உள்ளூர் சுற்றாடல்களை பேணிப் பராமரிக்கும் வகையில், சக்தி சார்ந்த சேவைகளின் பாதகமான சுற்றாடல் தாக்கங்களும் மற்றும் பாதகமான சமூக தாக்கங்களும் குறைக்கப்படும்.

இ.மி.ச.

6a காபன் திண்மமயமாக்க பயிரிடுதலைப் பயன்படுத்தி GHG வாயு அளவுகளை குறைத்து, எதிர்கால நிலக்கரி மின்னுற்பத்தி நிலைய சேர்வுகளின் காரணமாக மின்சாரத்தின் அதிகரிக்கும் காபன் தடம் இ.மி.ச. இனால் குறைக்கப்படும். சாத்தியமான காபன் திண்மமயமாக்க பயிரிடுதல் தெரிவுகள், காணியின் கிடைப்புத் தன்மை மற்றும் நிதி சார்ந்த பகுப்பாய்வு என்பவற்றை விவரிக்கின்ற ஒரு சாத்தியவள ஆய்வு 2020 ஆம் ஆண்டில் இ.மி.ச. இனால் மேற்கொள்ளப்படும்.

ம.அ.சு.அ.

6b சக்தித் துறையிலிருந்து வரும் உமிழ்வுசுமையை சமாளித்து, குறைக்கும் பொருட்டு, சக்தித் துறை தளங்களின் புகைப்போக்கி உமிழ்வுகள் 2020 ஆம் ஆண்டளவில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு, பொது கள மென்பாகத்தில் பதியப்படும் (மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு (ம.அ.சு.அ)).

இ.பெ.கூ./ LIOC

6c ஆவியாதலுக்கு அதிகளவு சாத்தியமான இலகு எரிபொருட்களுக்கு, 2020 ஆம் ஆண்டிலிருந்து, ஒரு மூடிய தானியங்கி கட்டுப்பாடு களஞ்சிய மற்றும் பகிர்ந்தளிப்பு முறைமை இ.பெ.கூ. மூலம் படிப்படியாக தாபிக்கப்படும்.

மி.ச.அ./ பெ.வ.அ.அ.

6d சகல சக்தித் துறை வசதிகளுக்குமான HSE நியமங்கள் 2020 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டளவில் முழுமையாக செயற்படுத்தப்படும்.

பொறுப்புக் கூறல்.

4.7 மீளப் புதுப்பிக்கத்தகு சக்தியின் பங்களிப்பை மேம்படுத்துதல்

இலக்குகளையும் மற்றும் மைல் கற்களையும் அடைந்து, நாட்டின் சக்திக் கலவையில் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அதிகரிக்கப்படும்.

மி.ச.அ.

7a 2019 ஆம் ஆண்டு இறுதியளவில், மீளப் புதுப்பிக்கத்தகு சக்தித் திட்டங்களின் அங்கீகாரத்தையும் மற்றும் அத்தகைய திட்டங்களுக்கான காணி வளங்கள் சுவீகரித்தலையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு காணி வளங்களின் பொறுப்புதாரிகளை/ பலதரப்பட்ட சார்ந்த நிறுவனங்களுக்கு பொறுப்புடைய அமைச்சு அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்படும்.

இ.மி.ச.

7b மின்சார வலையமைப்பிலுள்ள மட்டுப்பாடுகள், மின்சார அனுப்புகைத் தெரிவுகள் மற்றும் வள இயல்புகள் என்பன பற்றிய கவனமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், ஒரு முழுமையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி க்றிட் ஒருங்கிணைப்புத் திட்டம் 2020ஆம் ஆண்டு முதல் இ.மி.ச. மூலம் பிரசுரிக்கப்பட்டு,குறிப்பிட்ட கால இடைவெளிகளில் புதுப்பிக்கப்படும்.

நி.ச.அ.ச./ இ.மி.ச.

7c 2023 ஆம் ஆண்டளவில், ஒட்டுமொத்தமாக 1,600 MW. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக் கொள்திறனுடன் 20% மின்னுற்பத்தியை பெறுவதற்கு, 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், "முதலிடுவதற்கான தயார்" கருத்திட்டங்களின் ஒரு தொடர்ச்சியை நி. ச.அ.ச. மூலம் பெற்றுக்கொள்ளும் வகையில், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி முதலீடுகள் தொடர்பான முழுமையான ஒரு போட்டிக் கேள்வி அழைத்தல் திட்டம், ஒரு வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

7d மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக் கட்டணங்கள் நடைமுறையில் இருக்கும் வேளையில் பெறப்பட்டு, அங்கீகார நடபடிமுறையின் பல கட்டங்களிலிருக்கிற, ஆனாலும் அக்கட்டணங்களுக்கான முடிவுறுத்துகையினால் நிறுத்திவைக்கப்பட்ட, நி.ச.அ.ச. இற்கு கிடைத்த விண்ணப்பங்கள், (கருத்திட்டம், முதலீடுகள் முதலியவற்றின் முதிர்ச்சியை கருத்திற்கொண்டு, அந்த விண்ணப்பங்கள் போட்டிற்கு இருக்கின்ற நேரத்தில், கருத்திட்டத்தை முன்வைக்கும் தரப்புகளுக்கு முந்துரிமைகளை வழங்குவது போன்ற பொருத்தமான இடைக்கால அணுகுமுறைகளை பயன்படுத்தி), ஒரு போட்டிற்கான கேள்வி மாதிரிக்கு நெறிப்படுத்தப்படும். வித்தியாசமான தொழில்நுட்பங்களின் அவற்றின் உள்ளார்ந்த அம்சங்களை கருத்திற்கொண்டு, அத்தகைய மாற்றுவழித் தெரிவுகள் அடங்கிய பட்டியல் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இ.மி.ச. மற்றும் நி.ச.அ.ச. ஆகியவற்றினால் கூட்டிணைந்து தயாரிக்கப்படும். ஆதலால், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள அத்தகைய சகல திட்டங்களும் 2023 ஆம் ஆண்டு இறுதியளவில், போட்டித் தன்மை வாய்ந்த ஒரு கேள்வி அழைத்தல் சட்டகத்தினுள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட முடியும். — நி.ச.அ.ச./ இ.மி.ச.

7e நீர்வலு, சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி என்பன தொடர்பான நவீன எதிர்வுகூறும் முறைமைகள் ஏனைய பொருத்தமான சம்மந்தப்பட்ட நிறுவனகளுடன் இணைந்து இ.மி.ச. மூலம் 2020 ஆம் ஆண்டு இறுதியில் தாபிக்கப்படும். — இ.மி.ச./ நி.ச.அ.ச.

7f அக்கறையுடைய சகல வாடிக்கையாளர் பிரிவுகளுக்கும் ஒரு கட்டண அடிப்படையிலான பசுமைக் கட்டணம்/ பசுமை சக்தி சான்றிதழ் பொதி ஒரு தெரிவுக் கட்டணமாக வழங்கப்படும். அதிகரிக்கும் வருமானத்தின் ஒரு பகுதி இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்திற்கு வரவுவைக்கப்படுவதன் மூலமாக மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும். — இ.மி.ச./ லெகோ

4.8 சக்தித் துறையில் நல்லாட்சியை வலுப்படுத்துதல் — பொறுப்புக் கூறல்

பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவகங்களினால் பின்வரும் இலக்குகளையும் மைல் கற்களையும் அடைவதன் மூலம், சக்தித் துறையில் நல்லாட்சியை உறுதி செய்யும் நிமித்தம் நிலையான ஒரு கொள்கை சார்ந்த சூழலை உருவாக்கி, ஒழுங்குமுறைச் சட்டகங்கள் மேலும் வலுப்படுத்தப்படும்.

8a ஒரு மேல்நிலைப் பெற்றோலிய அபிவிருத்தி விதிமுறை செயலமைவுத் திட்டத்தை தாபிப்பதற்குத் தேவையான சட்டம் அடங்கலாக, 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில், மேல்நிலைப் பெற்றோலிய அபிவிருத்திக்கு அவசியமான சட்டங்கள் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சினால் உறுதிசெய்யப்படும். — பெ.வ.அ.அ.

8b பின்நிலை பெற்றோலியக் தொழில்துறையை ஒழுங்குறுத்தும் பொருட்டு, 2020 ஆம் ஆண்டு இறுதியளவில், தேவையான சட்டத்தை இயற்றி சட்டமாக்குவதன் மூலம், ஒரு ஒழுங்குமுறைச் சட்டகமும், மனிதவலுவும் மற்றும் சுயாதீனமான ஒரு ஒழுங்குமுறை நிறுவகமும் தாபிக்கப்படும். — பெ.வ.அ.அ.

8c 2009 இன் இலங்கை மின்சார சட்டத்திற்கு இணங்க, 2019 நிதியாண்டிலிருந்து, சுயாதீன நிதி சார்ந்த அறிக்கையிடுகை முறையை பின்பற்றும் பொருட்டு இ.மி.ச. இல் தொழிற்படு அலகுகள் தாபிக்கப்படும். — மி.ச.அ.

8d வாடிக்கையாளர் தொடர்புகளை பேணும் பொருட்டு மிக முக்கியமான சொத்துக்களின் உகந்த நடவடிக்கை சார்ந்த செயற்பாடுகளிலிருந்து, முழு மதிப்பு சங்கிலியையும் உள்ளடக்கி, 2020 ஆம் ஆண்டளவில் தொடங்கி, கட்டம் கட்டமான ஒரு அணுகு முறையினூடாக, 2022 ஆம் ஆண்டளவில், மின்சக்தி வசதித் துறையை டிஜிட்டல்படுத்தும் கருமம் பூரணப்படுத்தப்படும். — இ.மி.ச./ லெகோ

மி.ச.அ./ பெ.வ.அ.அ.

8e 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பாதுகாப்பு, தரவுகளின் தரம் மற்றும் இரகசியத் தன்மை முதலிய அம்சங்களை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு சக்தித் துறை நிறுவனங்களினது டிஜிட்டல் தகவல்களின் சரியான முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கான ஒரு தரவு நிருவாகக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும்.

மி.ச.அ.

8f துறை சார்ந்த முக்கிய நிறுவனங்களின் சக்தித் துறை சார்ந்த கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அறிக்கையிடும் விடயம் 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் நி. ச.அ.ச. இன் தலைமையில் ஒரு தொழிற்படு குழு நியமிக்கப்பட்டு, ஒழுங்குறுத்தப்படும். 2019 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து, ஒவ்வொரு கலண்டர் ஆண்டு முடிவடைந்த பின்னரும், முதல் ஆறு மாதங்களுக்குள், ஒவ்வொரு ஆண்டிற்குமான இலங்கை சக்தி இருப்புத் தொகைச் சமநிலை வெளியிடப்படும்.

பெ.வ.அ.அ./ மி.ச.அ.

8g போட்டி அடிப்படையில் முதலீட்டுத் தரப்புகளிதும் மற்றும் அபிவிருத்திப் பங்காளித்துவத் தரப்புகளிதும் இலகுவான ஏற்கையின் நிமித்தம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் என 2020 ஆம் ஆண்டளவிலிருந்து, சகல சக்தித் துறை திட்டங்களும் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளும் இனங்காணப்பட்டு, தானியக்க திட்டம் தொடர்பான எண்ணக்கரு மாதிரிப் படிவங்களில் ஆவணப்படுத்தப்படும்.

மி.ச.அ./ பெ.வ.அ.அ.

8h சக்தி வசதிகளின் நிமித்தம் பொருளாதார இலக்குகளுடன் நிரல்படுத்தி முக்கியமான செயல் திறன் சுட்டிகள் (KPIs) 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2020 ஆம் ஆண்டிலிருந்து அந்தந்த அமைச்சின் மூலம் கண்காணிக்கப்பட்டு வெளியிடப்படும்.

மி.ச.அ./ பெ.வ.அ.அ.

8i அபிவிருத்தி அடைந்து வருகின்ற சக்தி உட்கட்டமைப்பு வசதிகளில் அரச - தனியார் துறை பங்காளித்துவத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தெளிவான வழிகாட்டல்கள் தாபிக்கப்படும்.

மி.ச.அ.

8j சாத்தியமான நன்மைகள் மற்றும் முன்நிபந்தனைகள் மற்றும் மின்சார மொத்த விற்பனை சந்தையை தாபிப்பதற்கும், மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பில் சக்தி சுழற்சியை அனுமதிப்பதற்கும் என ஒரு செயல் திட்டத்தை ஆராய்ந்து, அது பற்றி 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிக்கையிடப்படும்.

நி.ச.அ.ச.

8k நி. ச.அ.ச. மூலம் ஏற்கெனவே இயக்கப்படுகின்ற இணையவழி சக்தித் தரவுத்தளத்தை விஸ்தரித்து, சிறந்த சக்தித் தெரிவுகள், முறைப்பாட்டுபதிவு, விலை சார்ந்த போக்குகள் மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாடு என்பன தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், இறுதிப் பாவனையாளர்களை ஈடுபடச்செய்யும், கையடக்கத் தொலைபேசி சேவை வசதிக்கான ஒரு பிரயோகம் 2020 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தி செய்யப்படும்.

பொறுப்புக் கூறல்

4.9 எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு காணிகளை பெற்றுக்கொள்ளல்

எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளை தாபிப்பதற்கான உத்திசார் அமைவிடங்கள், பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள அந்தந்த நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளையும் மைல் கற்களையும் அடைவதனூடாக பாதகமான சமூகத் தாக்கங்களை குறைப்பதற்கும், அத்தகைய வசதிகளின் உரிய கால செயற்படுத்துகையை உறுதிசெய்வதற்கும் முன்கூட்டி ஒதுக்கி பெற்றுக்கொள்ளப்படும்.

மி.ச.அ.

9a நிலக்கரி, இயற்கை எரிவாயு, அணு சக்தி இயந்திரங்கள், சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் முனையங்கள் போன்ற எதிர்கால சக்தி உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கு பொருத்தமான ஸ்தலங்களை இனங்காணுகின்ற ஒரு மூலோபாய வசதிகள் - விவரக் குறிப்பு வரைபடம், குறித்த நோக்கத்திற்காக தாபிக்கப்படும் ஒரு கூட்டிணைந்த குழுவின் மூலம், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் கூட்டொத்துழைப்பில், 2020 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்படும்.

9b காற்று சக்தி மற்றும் சூரிய சக்திப் பேட்டைகள் போன்ற பாரியளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கு சிறந்த ஸ்தலங்களை இனங்காணுகின்ற ஒரு தலைமைத் திட்டம் வகுத்தமைத்தமைக்கப்பட்டு, 2020-2025 எனும் ஒரு அபிவிருத்தி கால அட்டவணையை உள்ளடக்கி, அது 2019 ஆம் ஆண்டு இறுதியில் வெளியிடப்படும். நி.ச.அ.ச.

9c 2020-2030 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள பெற்றோலிய, எரிவாயு குழாய் மார்க்க எடுத்துச் செல்லல் மற்றும் ஆதார மின்சார செலுத்துகை மார்க்கங்கள் இனங்காணப்பட்டு, 2020 ஆம் ஆண்டளவில் ஒரு கூட்டிணைந்த குழுவினால் ஒரு வரைபடமாக பிரசுரிக்கப்படும். இ.மி.ச./ இ.பெ.கூ.

9d ஏற்கெனவே கிடைக்கக்கூடிய GIS தரவுகளின் அடிப்படையில் மின்சாரம், நீர், தொடர்பாடல் மற்றும் பெற்றோலியம் என்பன அடங்கலாக ஏற்கெனவே காணப்படுகின்ற மற்றும் எதிர்கால நிலக்கீழ் வசதி உட்கட்டமைப்புகளை தெளிவாக சுட்டிக்காட்டுகின்ற ஒரு தேசிய GIS தரவுத்தளம் 2020 ஆம் ஆண்டளவில் இ.மி.ச. மூலம் தாபிக்கப்படும். இ.மி.வ.

9e பிணக்குகளை தீர்ப்பதற்கான முகவராண்மைகளுக்கு இடையில் பயன்பாட்டு மார்க்கங்கங்களின் ஒருங்கிணைப்பு அதிகார சபை 2020 ஆம் ஆண்டளவில் தாபிக்கப்படும். மி.ச.அ.

4.10 புத்தாக்கத்திற்கும் தொழில்வாண்மைக்கும் வாய்ப்புகளை அளித்தல் பொறுப்புக் கூறல்

இலங்கையின் புத்தாக்குநர்களும் மற்றும் தொழில்வாண்மையாளர்களும் மின்சக்தித் துறையில் ஈடுபடும் வகையில் அதன் விசாலத்தை கருத்திற்கொண்டு, அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய அந்த சக்தித் துறையில் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு பெறுமதி சேர்த்தல் முதலியன தொடர்பில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் ஊக்குவிக்கப்படும்.

10a இலங்கையின் தொழில்முயற்சிகளுக்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து, சக்தித் துறை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் ஈடுபடும் வகையில் அத்தகைய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அத்தகைய தொழில் முயற்சிகளுக்கும் மற்றும் கூட்டு வியாபார ஸ்தாபனங்களுக்கும் 25% உள்நாட்டு முந்துரிமை அளிக்கப்படும். மி.ச.அ.

10b 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில், பெரும் கூட்டிணைவில் தொழில்துறை மற்றும் கல்வி ஆகிய இரண்டு துறைகளையும் ஒன்றிணைத்து, சகல ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களையும் உள்ளடக்கி ஒரு ஆராய்ச்சி அபிவிருத்தி வலையமைப்பு நி. ச.அ.ச. மூலம் தாபிக்கப்படும். திரட்டிய புலமைச்சொத்துக்களை அவை வர்த்தகமயப்படும் வரை பாதுகாத்து, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றல் தொழில்நுட்பங்கள் தொடர்பான பத்து முன்னோடிக் கருத்திட்டங்களும், பத்து சக்தி வினைத்திறன் மேம்பாட்டு தொழில்நுட்பங்களும் 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், நி. ச.அ.ச. மூலம் அறிமுகப்படுத்தப்படும். நி.ச.அ.ச.

10c மின்சார க்றிட்களின் அளவீடு, கட்டுப்பாடு, முகாமைத்துவம் என்பவற்றில் நவீன ICT தொழில் நுட்பத்தைப் பிரயோகிக்கின்ற பரந்த மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரப்புகளின் பாரிய/ அதி ஊடுருவிய விரிவுறுத்தலை அனுமதிப்பதற்கும் மற்றும் மிகவும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் மின்சாரத்தை பாவிக்கும் வகையில் தற்போதைய வாடிக்கையாளர்களையும் மற்றும் புதிய வாடிக்கையாளர்களையும் அனுமதிப்பதற்கும் மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு சார்ந்த சொத்துக்களின் மிகவும் சிறந்த முகாமைத்துவ சாத்தியங்களை கண்டறியும் நோக்கில் இனங்காணப்படும் ஐந்து இடங்களில், ஸ்மார்ட் க்றிட் முன்னோடித் திட்டங்கள் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் இ.மி.ச./லெகோ மூலம் தாபிக்கப்படும். இ.மி.ச./ லெகோ

இ.மி.ச./ லெகோ

10d 2021 ஆம் ஆண்டளவில், ஒரு தானியக்க பதிலீட்டு முன்னோடித் திட்டம் இ.மி.ச./ லெகோ மூலம் செயற்படுத்தப்பட்டு, பொருளாதார ரீதியான அதன் மதிப்பீட்டை ஒரு எதிர்கால மின்னுற்பத்தித் தெரிவாக அனுமதிக்கும் வகையில் அதன் தாக்கங்கள் ஆவணப் படுத்தப்படும்.

இ.மி.ச./ லெகோ

10e பொது வசதி சார்ந்த செயற்பாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் அறிமுகப் படுத்தப்பட்டது முதல் சேகரித்து டிஜிட்டல் மயப்படுத்திய தரவுகள் படிமுறைப்படுத்தப் பட்டு, தொடர்ந்து கிடைக்கச் செய்யப்படும். அத்துடன்அத்தகைய தரவுகள் அறிவு சார்ந்த ஒரு பொக்கிஷமாகவும் பயன்படுத்தப்படும்.

நி.ச.அ.ச.

10f துறை சார்ந்த தொழில் தேர்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் தனியாள் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் சக்தித் துறை முழுதிலும் அறிவு வளங்களை சேகரிப்பதற்குமான பங்களிப்பு அடிப்படையிலான ஒரு வெகுமதி வழங்கும் திட்டம் 2020 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலமாக சக்தித் துறையின் அபிவிருத்திக்கு தேவையான சுதேசிய அறிவும் ஆற்றலும் போஷிக்கப்படும்.

சொற்களஞ்சியம்

ஆலோசனைக் குழு

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபைக்கு ஆலோசனையை வழங்கும் நிமித்தம் குறித்த விடயப் பிரிவில் நிபுணர்களை உள்ளடக்கி நியமிக்கப்பட்ட ஒரு சட்டமுறைக்குழு.

மின்சாரத்திற்கான கேள்விக்கு தானியக்க ரீதியிலான பதில்

மின்சார விநியோக நிலைமைகளுக்கு அல்லது இடைநேர் சம்பவங்களுக்கு பதிலளிக்கக்கூடிய தானியக்க கட்டுப்பாட்டு முறைமைகள் அடங்கிய ஒட்டுமொத்த விநியோக செலவுகளை குறைப்பதற்கான வாடிக்கையாளர் கேள்வியை மாற்றுவதற்கான செயற்பாடு

கட்டிட முகாமைத்துவ முறைமைகள்

ஒரு மேம்பட்ட சக்தி வினைத்திறன் மற்றும் கேள்வி முகாமைத்துவ குறிக்கோளுடன் சக்தியை மாற்றும் உபகரணங்களை நிருவகிக்கும் ஒரு கட்டிடத்திலுள்ள ஒரு கட்டுப்பாட்டு முறைமை

காபன் சமநிலை

மனித செயற்பாடுகளினால் சூழலுக்கு வெளியிடப்படுகின்ற மற்றும் சூழலிலிருந்து உறிஞ்சப்படுகின்ற காபன் புகைகளின் சமநிலை

காபன் திண்ம மயமாக்கம்

தாவரங்களின் ஒளிச்சேர்க்கையினால் வளிமண்டல காபனீரொட்சைட்டு உறிஞ்சப்பட்டு நீண்டகாலத்திற்கு திண்ம வடிவில் வைத்திருக்கப்படும் இயற்கை படிமுறை

கேள்விசார் முகாமைத்துவம்

ஒரு மின்சார முறைமையில் காணப்படுகின்ற மின்சாரத்திற்கான கேள்வியை இறுதிப் பாவனையாளர் வசதிகளில் தலையிட்டு நிருவகித்தல்

அனுப்புகை அறிவுறுத்தல்

மின்சார முறைமை இயக்குநர்கள் மின்சார கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக மின்பரிமாற்ற கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கின்ற மின்னுற்பத்தி அலகுகளின் வெளியீட்டை கட்டுபடுத்துகின்றனர். இந்த கட்டுப்படுத்தும் நடைமுறை மின்பிறப்பாக்கி அனுப்புகை என அழைக்கப்படும். ஒரு அறிவுறுத்தல் வாயிலான கட்டுப்படுத்தலாக இருந்தால், அது "அனுப்புகை அறிவுறுத்தல்" எனப்படும்.

அனுப்பக்கூடிய மின்னுற்பத்தி

அனுப்பக்கூடிய மின்னுற்பத்தி என்பது, மின்சார முறைமை இயக்குநர்களினால் கேட்டுக்கொள்ளப்படுகின்றபோது மின்சக்தி வெளியீட்டை சீராக்கும் அல்லது ஆரம்பிக்கும் அல்லது நிறுத்தும் வகையில் உள்ள மின்சார உற்பத்தி மூலங்களை குறிக்கும்.

மின்சார விநியோக உட்கட்டமைப்பு

தேசிய மின்பரிமாற்ற கட்டமைப்பிற்கு வாடிக்கையாளரின் மின்சாரப் பளுக்களை இணைக்கின்ற 33kV இற்கு குறைந்தளவில் இயங்குகின்ற மின்சார வலையமைப்பு

பின்நிலை வணிக செயல்முறை (downstream)

வாடிக்கையாளர்களுக்கு சீரியஉற்பத்திகளை பகிர்ந்தளிக்கும் பெற்றோலிய எரிபொருள் விநியோக தொடர் தொகுதியின் ஒருபிரிவு

மின்மயமாக்கல்

மின்விநியோக நிரல்களுடன் இணையும் வாய்ப்பை (பிரவேசத்தை) வழங்குதல். மின்சார இணைப்பை சாத்தியமான எல்லா வாடிக்கையாளர்களுக்கும் இலங்கை வழங்கியிருக்கிறது. அதில் 99.5% வாடிக்கையாளர்கள் செயல்திறமுடைய இணைப்பைக் கொண்டுள்ளனர்.

சக்திக் காவி

தேவையான போது அல்லது பிற்பட்டகால பாவனைக்காக ஒரு சக்தி சார்ந்த சேவையை வழங்கும் வகையில் வேறுபட்ட வடிவங்களில் சக்தியை உள்ளடக்கி அதனை பயன்படுத்தக்கூடிய சக்தியாக மாற்றக்கூடிய பொருள் அல்லது படிமாற்றம்.

சக்தி நெருக்கடிகள்

சக்தி தொடர்பில், வாடிக்கையாளர் கேள்வியை பூர்த்திசெய்வதற்கு தேவையான மின்சார விநியோகப் பற்றாக்குறை, மாற்றும் ஆற்றல் மற்றும் அளவுகளில் பற்றாக்குறை அல்லது நிதிகளில் பற்றாக்குறை.

பொருளாதாரத்தின் சக்தி செறிவு

பொருளாதாரத்தின் மதிப்பை ஒரு அலகு பெறுமானத்தால்கூட்டுவதற்குதேவைப்படும் சக்தியின் அளவு.

சக்தி சார்ந்த சேவைகள்

ஒரு பணியை, விருப்பமான சேவையை பெற்றுக்கொள்வதற்கான அல்லது ஒரு நிலைக்கு வசதியளிப்பதற்கான வழிமுறைகளாக விளங்கும் ஏதாகிலும் ஒரு சக்தி வடிவத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படும் தொழிற்பாடுகள்.

சக்தி மூல பெயர்ச்சி

மட்டுப்பட்டளவான சக்தி மூலங்களில் தங்கியிருப்பதை குறைக்கும் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாவனையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போக்கு.

நிலையான (மின் உற்பத்தி) கொள்திறன்

மின்சார முறைமை இயக்குநர்களின் மூலமான அனுப்புகைக்கு கிடைக்கச் செய்யப்படுவதற்கு உத்தரவாதமளிக்கக்கூடிய மின்னுற்பத்திக் கொள்திறன். சிறிய நீர்வலு, சூரிய ஒளிக்கலம் மற்றும் காற்று முதலிய சக்தி மூலங்கள், அந்தந்த சக்தி மூலம் கிடைக்கும் நேரத்திலும் கிடைப்புத் தன்மையிலும் அவற்றின்கொள்திறன் நிர்ணயிக்கப்படுவதால், இந்த வரைவிலக்கணத்தில் அடங்கா. ஆகக்குறைந்தது ஒரு சில மணித்தியாலங்களுக்காவது இயக்கும் பொருட்டு அழுத்தம் சீராக்கும் நீர் குட்டைகளில் போதிய கொள்ளளவைக் கொண்டுள்ள "ஓடும் ஆற்று நீர்" நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் நிலையான கொள்திறனுடையவையாக கருதப்படும். ஏனெனில், அவற்றின் மின்னுற்பத்தி அனுப்பப்பட வேண்டிய நேரங்களை மின்சார முறைமை இயக்குநர்கள் திட்டமிடலாம் என்பதால்.

உலைச் சாம்பல்

பொதுவாக ஒரு உமிழ்வு கட்டுப்பாட்டு முறைமையினால் அகற்றப்படும் ஒரு எரி செயன்முறையிலிருந்து வரும் இலகு சாம்பல்

உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள்

மனித காலவரம்புக்குள் சுழற்சி மீள்நிரப்பலுக்கு உட்படாத சக்தி வளங்கள்

பசுமைச் சக்திச் சான்றிதழ்

முன்வரையறுக்கப்பட்ட நிலைபெறுதகு சுட்டிகளுக்கிணங்க குறித்த வினைத்திறன் நியமங்களை அல்லது பங்களிப்பு காரணிகளைப் பூர்த்திசெய்யும் கட்டிடங்களுக்கான அல்லது சக்தியை மாற்றும் முறைமைகளுக்கான சான்றிதழ்

பசுமைக் கொள்முதல் செயல்முறைகள்

சக்தியினதும் ஏனைய வளங்களினதும் நிலைபெறுதகு மாற்றலுக்கான அல்லது பாவனைக்கான பங்களிப்பு அளவுக்கு ஏற்ப அங்கீகாரம் வழங்கப்படுகின்ற கொள்முதல் செயல்முறைகள்

பசுமைக் கட்டணம்

சமூகத்திலும் சுற்றாடலிலும் ஏனையவற்றை விடவும் ஆகக்குறைந்த மீளாவிளைவுகளை தரும் வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்களின் பாவனையால், அதிகரித்து வருகின்ற செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு, ஒரு காப்பீட்டுக் கட்டணத்தை உள்ளடக்குகின்ற மின்சாரத்திற்கான ஒரு விலை நிர்ணய அமைப்பு

நீர்மின் நீரேந்து பரப்புகள்

மழை நீரைப் பெற்று அந்த மழை நீரை ஒரு நீர்த்தேக்கத்திற்கு அல்லது ஒரு நதிக்கு அனுப்பி ஒருமின்னுற்பத்தி நிலையத்திற்கு அல்லது பல மின்னுற்பத்தி நிலையங்களுக்கு வழங்கும் தரை மேற்பரப்பு

சுதேசிய சக்தி

இலங்கையின் ஆட்சிப்பகுதிக்குள் அல்லது பிரத்தியேகமான பொருளாதார வலயத்தில் காணப்படும் மீளப்புதுப்பிக்கக்கூடிய அல்லது மீளப்புதுப்பிக்கவியலாத சக்தி வளங்கள்

நிறுவப்பட்ட மின்னுற்பத்திக் கொள்திறன்

ஒரு மின்னுற்பத்தி நிலையத்தின் கணிக்கப்பட்ட சக்தி உற்பத்திக் கொள்திறன்

இடைத் தடங்கல்

நேரத்திற்கேற்ப சக்தி மூலங்களின் இயல்பான விநியோக மாறுபாடு

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு

பொதுவாக மறை 160 பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்குகீழ் காப்பிடப்பட்ட கொள்கலன்களில் பாதுகாப்பாக அடைக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்ற திரவ வடிவ இயற்கை எரிவாயு

மின்சாரப் பளு விவரம்

ஒரு வாடிக்கையாளரினால் அல்லது ஒரு பிராந்தியத்தினால் அல்லது ஒரு நாட்டினால் மின்சாரம் பாவிக்கப்படும் பாங்கு

உள்நாட்டு விருப்பத்தேர்வு

ஒரு சர்வதேச கேள்வி மனு தாரர் தரப்பிடமிருந்து கிடைக்கின்ற ஒரு கேள்வி மனுவுக்கான முந்துரிமையை விடவும், ஒரு உள்நாட்டு கேள்வி மனுதாரர் தரப்பிடமிருந்து கிடைக்கும் ஒரு விலை நிர்ணய கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஒரு விகித வரையறை

குறைந்த கார்பன் செறிவு

சக்தி சார்ந்த ஒரு சேவையை வழங்குவதற்காக உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் குறைந்தளவான பாவனை

குறைந்த மின் அழுத்தம்

முந்நிலைமை (three-phase) 400 வோல்ட் அல்லது ஒருநிலை (single-phase) 230 வோல்ட்

நீண்டகால மின்னுற்பத்தி விரிவாக்கல் திட்டம்

எதிர்கால பாவனையின் நிமித்தம் கிடைக்கச்செய்யும் பொருட்டு இலங்கை மின்சார சபையினால் தொகுக்கப்பட்டு பிரசுரிக்கப்படும் மின்னுற்பத்தி நிலையங்களின் விபரங்களை சுட்டிக்காட்டுகின்ற ஒரு நீண்டகாலத் திட்டம்

இயற்கை எரிவாயு

அநேகமாக மெதேன் வாயுவை உள்ளடக்கிய எண்ணெய்ப் வயல்களிலிருந்து அல்லது எரிவாயு வயல்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எரிவாயு

மின்சார வலையமைப்பு இழப்புகள்

தேசிய மின் பரிமாற்ற கட்டமைப்பினூடாக மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கும் மற்றும் செலுத்தியனுப்பும் போது மின்சார விநியோகத்தில் நிகழும் சக்தி இழப்புகள்

ஒப்-க்றிட் (தனித்தியங்கும் மின் பரிமாற்ற கட்டமைப்பு)

தேசிய மின் பரிமாற்ற கட்டமைப்புடன் இணைக்கப்படாத பாவனையாளர்கள் மற்றும் மின்சாரத்தை வழங்கும் மின்னுற்பத்தி முறைமைகள்

ஒன்-க்றிட் (இணைப்பிலுள்ள மின் பரிமாற்ற கட்டமைப்பு)

தேசிய மின் பரிமாற்ற கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட மின்னுற்பத்தி முறைமைகள் அல்லது மின்சாரப் பாவனையாளர்கள்

சக்தி தொகுப்பாக்கச் செயற்பாடு

கொள்வனவுத் தரப்புகள் (பொதுவாக மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கம்பனிகள் அல்லது மின்சார வாடிக்கையாளர்கள்) உத்தரவாதத்துடன் எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய மின்னாக்கிகளின் கொள்திறனை கொள்வனவு செய்யும் வகையிலான ஒரு முறைமை

முதன்மைச் சக்தி

மீளப் புதுப்பிக்கக்கூடிய அல்லது மீளப் புதுப்பிக்கவியலாத அதன் இயற்கை வடிவில் காணப்படும் சக்தி

நிரூபணமான மின்னுற்பத்தித் தொழில்நுட்பங்கள்

பரந்தளவில் வர்த்தக ரீதியான பாவனை அளவுக்கு விருத்தி செய்யப்பட்டுள்ள மின்சார உற்பத்தித் தொழில்நுட்பங்கள்

மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி

மனித கால வரம்புக்குள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் சக்தி வளங்கள்

இரண்டாம்நிலை சக்தி

சக்தி மாற்றல் செயன்முறையின் பயனாக அதன் ஆரம்பவடிவத்தில் இருந்து வித்தியாசமான ஒரு வடிவில் கிடைக்கக்கூடிய சக்தி

ஸ்மார்ட் க்றிட் (நுண்மையான மின் பரிமாற்ற கட்டமைப்பு)

மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு ஆதனங்களைச் சிறந்த முறையில் நிருவகித்தல், மற்றும் முதலீடுகளை வித்தியாசப்படுத்தல், இயக்கச் செயற்பாட்டு செலவுகளை குறைத்தல் ஆகியவற்றின் மூலமாக மின்சார முறைமைகளின் ஒட்டுமொத்த மின்சார செலவுகளையும் மற்றும் சுற்றாடல் சுமைகளையும் குறைக்கும் பொருட்டு மின் பரிமாற்றக் கட்டமைப்பின் மின்சாரத்தின் அளவீடு, கட்டுப்பாடு, நிருவகித்தல் ஆகியவற்றில் உயர் ICT தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்ற பரந்திருக்கும் NRE மின்னுற்பத்தித் தரப்புகளின் பாரியளவான/ஆழமாக ஊடுருவிய அபிவிருத்தியை அனுமதித்து, தற்போதைய மற்றும் புதிய மின்சார வாடிக்கையாளர்களை மிகவும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் மின்சாரத்தை பாவிப்பதற்கு அனுமதித்தல் என்பன தொடர்பான பதிலீட்டை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒரு தொகுதித் தொழில்நுட்பங்கள்

சமூக மற்றும் சுற்றுச்சூழல் வெளிப்பாடுகள்

ஏதாவது ஒரு பொருளாதார அல்லது வர்த்தக செயற்பாட்டிலிருந்து வரும் சமூக சுற்றாடல் தாக்கங்களும் மற்றும் கிரயங்களும்

சமூக சந்தைப் பொருளாதாரம்

சந்தையில் நியாயமான போட்டித் தன்மையையும் மற்றும் சமூகத்தில் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினர்களுக்கான விஷேட கவனிப்பையும் ஏற்படுத்தும் சமூகக் கொள்கைகள் அடங்கிய ஒரு சுயாதீன சந்தை முதலாளித்துவ பொருளாதார முறைமையை ஒன்றிணைக்கின்ற ஒரு சமூகப் பொருளாதார மாதிரி

மின்சார வரித் தீர்வைகளினூடாக சமூகமயப்படுத்தல்

தனியாள் மின்சார வாடிக்கையாளர்களுக்கு அறவிடப்படாத ஆனாலும் சகல மின்சார வாடிக்கையாளர்களுக்கும் சராசரியாக இருக்க வேண்டும் என அனுமதிக்கப்படுகின்ற செலவுகள் தொடர்பில் மின்சார வசதி ஆதனங்களில் உள்ளடக்கப்படும் செலவுகள்

இலங்கைச் சக்தி இருப்புத் தொகைச் சமநிலை

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் பிரசுரிக்கப்படும் சக்தித் துறை பற்றிய புள்ளி விபரங்களின் வருடாந்தத் தொகுப்பு

மூலோபாய எரிபொருள் ஒதுக்கங்கள்

குறிப்பிட்டவொரு சக்தி வசதிக்கு, இடத்திற்கு அல்லது பிராந்தியத்திற்கு வழமையாக விநியோகிக்கப்படும் மின்சாரத்தில் தடை ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் பிற்பட்டகாலத்திற்காக சேமித்து களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் எரிபொருட்களின் அளவுகள்

உப பிரிவு

ஒரு சில பொதுவான அம்சங்களின் அடிப்படையில் விவரிக்கக்கூடிய ஒரு துறையில் காணப்படும் ஒரு பிரிவு

மின்சார விநியோக சங்கிலித் தொடர் தொகுதி

ஒரு நிகழும் இடத்திலிருந்து ஒரு இறுதிப் பாவனையாளர் வரை ஒரு உற்பத்தியை அல்லது சேவையை வழங்குவதில் சம்பந்தப்படுகின்ற நிறுவனங்கள், வசதிகள், நடபடிமுறைகள், தகவல்கள் மற்றும் வளங்கள்

நிலையான அபிவிருத்தி இலக்குகள்

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுக் கூட்டத்தில் சகல மக்களும் சமாதானமாகவும் வளமாகவும் வாழவும், வறுமையை ஒழிக்கவும், புவியைப் பாதுகாக்கவும் பதினேழு உலகலாவிய இலக்குகளை அடைவது தொடர்பான செயல் நடவடிக்கைக்கான ஒரு உலகலாவிய அழைப்பு

மின்சார செலுத்துகை உட்கட்டமைப்பு வசதி

மின்சார வினியோக அமைப்புக்கு இணைக்கப்படுகின்ற 33kV இற்கு அதிகமாக மின்னுற்பத்தி வசதிகளை இயக்குகின்ற மின்சார வலையமைப்பு

எல்லோருக்குமான பொதுவான பிரவேசம்

சாத்தியமான மின்சார வாடிக்கையாளரின் வளாகத்தில் 100 மீற்றர் அளவிற்குள் வழமையாக ஒரு மின்சார மார்க்கத்தை கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகள் கொண்ட நவீன சக்தி மூலங்களுக்கான பிரவேசம்

உயர் நடுத்தர வருமான நாடு

மொத்தத் தேசிய வருமானம் தலா 896 அமெரிக்க டாலர் முதல் 12,055 அமெரிக்க டாலர் இடைப்பட்டதாக உலக வங்கி வரையறை செய்திருக்கின்ற நாடு

மேல்நிலை செயல்முறை

பெற்றோலிய உற்பத்திகளை சுத்திகரிக்கும் நிலையங்களுக்கு வளங்களை அகழ்ந்தெடுத்து விநியோகித்தல், சக்தி வள ஸ்தலங்களை ஆய்வுசெய்தல் முதலிய செயற்பாடுகளில் சம்பந்தப்படுகின்ற பெற்றோலிய எரிபொருள் விநியோக தொடர் தொகுதியின் ஒரு பிரிவு

மாறுபடும் தன்மை

ஓர் இயற்கை நிகழ்வு காரணமாக குறித்த ஒரு சக்தி வளத்தில் காலத்துடன் சக்தியின் அளவில் ஏற்படும் மாற்றம்

கழிவு வெப்பம்

ஒரு எரி செயன்முறையிலிருந்து திட்டமிட்டு அல்லது எண்ணிச் செய்யப்படாமல் இழக்கப்படும் அனல் சக்தி

08-865

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.